## அன்பு அம்புகளுடன் ஒரு யாத்திரை

## முன்னுரை

சமீபத்தில் ஒரு யாத்திரை போனோம். மனதில் அன்பு, நட்பு, பரிவு, மனிதாபிமானம், கழிவிரக்கம் – போன்ற அம்புகளை சுமந்து சென்ற யாத்திரை. ஒரு பிராயச்சித்த யாத்திரை என்றும் சொல்லலாம்.

வெறுப்பு அரசியல் தீயில் தீவிரமான வன்முறையால்  பாதிக்கப் பட்டுள்ள  மக்களுக்கு, அந்தக் குடும்பங்களுக்கு ஆறுதல் சொல்லவும், அவர்களுக்கு ஆதரவாக உதவியாக இருப்போம் என்று நம்பிக்கை ஊட்டுவதற்காகவும், நாட்டு மக்களின் மனசாட்சியை தட்டி எழுப்புவதற்காகவும்,  நியாயத்தை கோரியும், மேலும் ஒரு பிராயசித்தம் போலும் இந்த யாத்திரையை செய்வதாக முடிவு செய்தபோது  சில பல நண்பர்கள் , நிறுவனங்கள், சமூக இயக்கங்கள் முன் வந்து கூடி இசைந்து இந்த யாத்திரையில் உற்சாகமாக கலந்து கொண்டார்கள்.

சமீப காலத்தில் நம் நாட்டில் முஸ்லிம்கள், தலித்துகள், கிறிஸ்துவர்கள் மற்றும் சிறுபான்மையோர்களை குறிவைத்து கம்படி சம்பவங்கள், கொலைகள்  அடிக்கடி நடக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. கம்படிகளால் கொலைகள் காயங்கள் நடந்த இடங்களில் அவர்கள் தினமும் என்ன நடக்குமோ என்ற பயமும் கவலையும் திகிலுமாக இருக்கிறார்கள். கம்படிகள் நடக்கும்போது அவற்றை எதிர்க்கவோ தடுக்கவோ யாரும் முன் வருவதில்லை, பெரும்பான்மை சமூகம் இதை எதிர்த்துப் பேசாமல் நிச்சப்தமாக இருக்கிறார்கள். இது மிகவும் கவலைக்குரிய நிலைமை.

இந்த இருண்ட நாட்களில் நாங்கள் மேற்கொண்ட இந்த அன்பு யாத்திரை ஒரு சின்ன, ஆனால் துணிச்சலான முயற்சி. நம் நாட்டில் வெறுப்பு அரசியல் புயலாக, சூராவளியாக ஆடும் நிலைமையில் ஒரு சின்ன விளக்கு ஏற்றுவதற்காக மேற்கொண்ட முயற்சி இது.

இந்த யாத்திரையில் நாங்கள் கம்படியால் கொலை செய்து பாதிக்கப்பட்ட குடும்பங்கள், போலிஸாரால் என்கௌண்டர் கொலை செய்யப்பட்டு குடும்பத்தோரை இழந்த குடும்பங்கள், பில்லிசூநியக்காரி என்று கொலை செய்த பெண்களின் குடும்பங்கள் – இவர்களை போய்  சந்தித்தோம். இந்த யாத்திரை செப்டம்பர் நாலாம் தேதி அஸ்ஸாமில் தொடங்கி ஜார்கண்ட், கர்நாடக வழியாக டெல்லியில் திலக் விஹாருக்கு (இந்திரா காந்தி கொலை பட்ட போது கலகம் நடந்த இடம் ) செப்டம்பர் பதினொன்றாம் தேதி சேர்ந்து கொண்டது. இரண்டாம் தசையில் தில்லியிலிருந்து கிளம்பி மேற்கு உத்தர பிரதேசம்,  ஹரியானா, ராஜஸ்தான், குஜராத் மாகாணங்களில் சில  இடங்களுக்கு சென்றோம். எல்லோரும் சேர்ந்து பஸ்ஸில் பிரயாணம் செய்தோம்.

நாங்கள் தினசரி டைரியில் எழுதிய குறிப்புகளை கூட்டி ஒன்று சேர்த்து ஒரு அறிக்கையாக எழுதியிருக்கிறோம். அதை இங்கே உங்கள் முன் வைக்கிறோம். மேலே சொன்னபடி பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களை சந்தித்தபோது அந்த குடும்பங்கள் தங்கள் நிலைமையை எப்படி சமாளித்து கொண்டிருக்கின்றன, வாழ்க்கைப் பிழைப்பை தொடர அவர்களுக்கு என்ன உதவி வேண்டும், மேலும் மனசாந்தியுடன் வாழ்க்கையை தொடரவும், நியாயத்திற்காக போராடும்போது அவர்களுக்கு எந்தமாதிரி கைகொடுக்க வேண்டும் என்பதையெல்லாம் ஒருவாறு கணித்தோம். குடும்பங்களை சந்தித்த பிறகு பொதுக் கூட்டங்கள் – அமன் சபா- நடந்தன. அங்கு ஒத்துணர்வு, அன்பு, ஆதரவு, பரஸ்பர உதவி, போன்ற கருத்துகள் எடுத்துரைக்கப் பட்டன. உள்ளூர் சமுதாயத்தில் அமைதி, நீதி, பரஸ்பரம் நட்பு, இவைகளை நிலை நாட்டுவதற்கு அங்கு வசிக்கும் ஜனங்களோடு "சாந்தி மானிட குடிமக்கள் சபைகள்" (Aman Insaaniyat Citizens Council) அமைக்கப் பட்டன.

மகாத்மா காந்தி தன் கடைசி நாட்களில் நாட்டில் ஒவ்வொரு மூலையிலும் ஹிந்து-முஸ்லிம் கலகங்களால் மூழ்கி இருந்தபோது தன் உயிரைப் பணயம் வைத்து ஹிந்து-முஸ்லிம் கலகங்கள் நடந்து கொண்டிருந்த நவகளிக்கு சென்று அமைதியை நிலைநாட்ட பாதயாத்திரை செய்தார். நாடு முழுவதும் மத சமரசமும் அமைதியும் நிலவ வேண்டும் என்று வேண்டிக்கொண்டார்; அன்புக் கட்டளையிட்டார். அவருடைய வாழ்க்கையில் அந்த நாட்கள் மிகச் சிறந்த பொன்னான நாட்கள். அவருக்கு எங்கள் பணிவான அஞ்சலியை இந்த யாத்திரை மூலம் செலுத்த விரும்பினோம். அதனால் எங்களுடைய அடுத்த நிறுத்தம் அக்டோபர் இரண்டாம் தேதி காந்தி பிறந்த போர்பந்தர். "நாமெல்லோரும் காந்தியே", "வாருங்கள், போர்பந்தர் செல்வோம்", என்பது எங்கள் முழக்கம்.

இந்த யாத்திரை டாக்டர் அம்பேத்கருக்கும் அஞ்சலியாக இருக்க வேண்டும் என்று விரும்பினோம். அவர் நம் அரசியல் சாசனத்திற்கு தலைமை வகுத்தது மட்டுமில்லாமல் ஜனநாயகத்திற்கு அடிப்படைக் கொள்கை சகோதரத்துவம் என்றும் விளக்கி உள்ளார். அந்த சகோதரத்துவம்தான் இப்போது கம்பபடிகளால் தாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதனால் அவர் வாழ்ந்த இடம் மொவ் (MOW) நகரத்திற்கும் செல்வதாக முடிவு செய்தோம்.

**இந்த யாத்திரை என்ன சாதித்தது?**

சக பிரயாணிகள் இந்த யாத்திரை அனுபவத்தை எப்போதும் மறக்கமாட்டார்கள். அவர்கள் கேட்ட சோகக் கதைகளை தன்னுடைய ஆத்மாக்களில் எப்போதும் சுமந்து கொண்டிருப்பார்கள்.

ஒன்று மட்டும் நிச்சயமாக சொல்ல முடியும். நாங்கள் சந்தித்த அந்த ஐம்பது குடும்பங்கள் கடுமையான வெறுப்பு, மற்றும் அரசாங்க அராஜக அநீதியில் வெந்து

கொண்டிருக்கும் மக்கள். அவர்கள் எங்களால் பெரிய ஆறுதல் பெற்றார்கள். அது ஒன்றே போதும், இந்த யாத்திரையின் மிகப் பெரிய சாதனை என்று சொல்லக் கூடும்.

பெஹலு கானைக் கொன்ற இடத்தில் நங்கள் பூ அஞ்சலி செலுத்தும் பொது எங்கள் பஸ் மேல் கல்வீசல் நடந்தது. அப்போது மனிதாபிமான மனசாட்சியை எழுப்ப வேண்டும் என்றால் இன்னும் பல இடங்களுக்கு செல்லவேண்டும் என்று தெரிந்தது. ஏனென்றால் பல இடங்களில் பெரும்பான்மை சமூகம் சிறுபான்மையோர் மற்றும் தலித் சமூகம் மேல் வன்முறை சம்பவங்கள் நடக்கும்போது அவற்றைப் பற்றி வருத்தப் படவில்லை என்பது நிதர்சனமாக தெரிந்தது.

ஆனால் எங்கள் மேல் கற்கள், செருப்புகள் மாத்திரம் அல்ல, சில இடங்களில் ரோஜா பூக்களையும் சொறிந்தார்கள் என்பதை நினைத்து ஆறுதல் அடைந்தோம். இந்த யாத்திரை செலவிற்கு கூட்டு-நிதிக்கு வேண்டுகோள் விடுத்தபோது பல பேர் முன் வந்து நன்கொடை கொடுத்தார்கள். அவர்கள் எல்லோருமே இந்த யாத்திரையில் பங்கு கொண்டவர் போல்தான். நாங்கள் சென்ற பல இடங்களில் பொதுமக்கள் ராத்திரி வெகுநேரமானாலும் காத்திருந்து வரவேற்பு அளித்தார்கள்; நிறைய பேர் பொது கூட்டத்திற்கு வந்து பங்கு கொண்டார்கள்.

பொது மக்களின் மனசாட்சியை தட்டி எழுப்புவதே இந்த யாத்திரையின் முக்கிய இலட்சியம். எங்கள் சக பிரயாணிகள் இப்பவே அவர்கள் கேட்ட கண்ட சம்பவங்களைப் பற்றி எழுதவும், பேசவும் புகைப்படமாக காண்பிக்கவும் ஆரம்பித்து விட்டார்கள். எப்படி இந்த நாட்டு மக்கள் பயத்திலும் வெறுப்பு தீயிலும் அநீதியிலும் நடுவே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டி பொது மக்களின் மனதைத் தொட்டு எழுப்புவதே இந்த யாத்திரையின் முக்கிய அம்சம், முக்கிய நோக்கம்.

## முதல் நாள்

இன்று அன்பு யாத்திரையின் முதல் நாள் மனதைப் பிழியும் வகையில் இருந்தது. அஸ்ஸாமில் நகாவ்ன் என்ற ஊரில் ரியாசும் அபு ஹநீபும் கம்பபடித்தாக்குக்கு பலியானவர்கள். இருபதுக்கும் குறைந்த வயசு அவர்களுக்கு. முஸ்லிம்கள் இல்லாத கிராமத்திற்கு அருகே நதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களை பசு மாடுகள் திருடர்கள் என்று வதந்தியைக் கிளப்பி அவர்களை அடித்து கொன்று விட்டு அவர்கள் செத்த பிறகு உடல்களை சின்னா பின்னமாக ஆக்கி போட்டுவிட்டு போனார்கள். அவர்களின் பெற்றோர்கள் துக்கம் தாங்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். எங்களின் வருகை அவர்களுக்கு சிறிதாவது ஆறுதல் அளித்திருக்கும் என்று நம்புகிறோம். இந்த கேசில் போலிஸ் பத்து பேரை கைது செய்தது. அவர்கள் உடனே பெயில் கொடுத்து வெளிவந்துவிட்டார்கள். வக்கீல்களின் ஒரு குழு இந்த கேசை எடுத்துக் கொண்டு அந்த குடும்பத்திற்கு நியாயம் வரும் வரை போராடுவோம் என்று தீர்மானித்திருக்கிறார்கள்.

நகாவ்ன் ஜில்லாவில் நாங்கள் ஒரு “அமன் மனிதாபிமான குடிமக்கள் கௌன்சில்” ஒன்றை ஏற்படுத்தினோம். இவ்வாறு ஒவ்வொடு ஜில்லாவிலும் “அமன் மனிதாபிமான குடிமக்கள் கௌன்சில்” ஏற்பாடாகி வெறுப்பு அரசியலை எதிர்த்து போராடவேண்டும் என்று நாங்கள் வேண்டுகிறோம். அன்று மதியம் அஸ்ஸாம் தலைநகரான குவஹாதியில் மாணவர்களின் தலைவர்கள் வெறுப்பு அரசியலைக் கண்டித்து பொதுக் கூட்டத்தில் பேசினார்கள்.

## இரண்டாம் நாள்

இரண்டாம் நாள் முடியும் முன்னேயே எங்களுக்கு ஒரு அதிர்ச்சியான செய்தி காத்திருந்தது: பெங்களூரில் கௌரி லங்கேஷை கொலை செய்து விட்டார்கள் என்ற செய்தி. மறுபடியும் யாருக்கும் பயப்படாத மிக தைரியத்துடன் வெறுப்பு அரசியலையும் இந்துத்வ அரசியலையும் கண்டிக்கும் ஒருவர் குரலை அமுக்கிவிட்டார்கள். ஆனால் பூத உடலில் இல்லாத போதிலும் அந்த பெண்மணியின் குரல் இன்னும் பலமாய் ஒலிக்கும். இதில் சந்தேகமில்லை.

இரண்டாவது நாளும் கொலை பட்டவர்களின் பெற்றோர்களை சந்தித்து அவர்களின் துக்கத்தை பகிர்ந்துகொண்ட நாள். அவர்களை கொன்றது கம்பபடி கொலைகாரர்கள் அல்ல. வெறுப்பு அரசியலின் வேறொரு வெறிச்செயல். அஸ்ஸாமில் கோஆல்பாடா ஜில்லாவில் கற்புஜா என்ற ஊரில் யாகூபுக்கு அவன் “சந்தேகப் படும்படியான வாக்காளர்” என்று நோட்டீஸ் அனுப்பினார்கள். அஸ்ஸாமில் இது வெகு சாதாரணம்: பெற்றோர் இந்திய குடிமக்களாக கருதப் படுவார்கள்;குழந்தைகள் “சந்தேக வாக்காளர்கள்” என்று கருதப் படுவார்கள். வங்காள முஸ்லிம்களை குறிப்பெடுத்து வாக்காளர் லிஸ்டிலிருந்து வெளியேற்றும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்

படுகிறது என்று இது கருதப் படுகிறது. இதை எதிர்த்து ஜூன் மாதம் முப்பதாம் தேதி ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. எதிர்ப்பு செய்தவர்கள் அங்கே சிறிய கல்லெறி செய்தார்கள். ஒரு வீடியோ படத்தில் இந்த சம்பவம் ரிகார்ட் ஆகியிருக்கிறது. அதில் ஒரு போலிஸ்காரர் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு யாகூபை சுட்டு கொலை செய்ததும் ரெகார்ட் ஆகியிருக்கிறது. முன்பு எந்த எச்சரிக்கையும் இல்லாமல், இடுப்புக்கு கீழே சுட வேண்டும் என்ற ரூலையும் கடை பிடிக்காமல் நேரே சுட்டு கொலை செய்தார்கள் என்பது அந்த வீடியோவை பார்த்தால் தெரியும்.

லபிகுல் இஸ்லாம் அஹமத்துடைய பெற்றோர்களும் துக்கத்தில் ஆழ்ந்திருந்தார்கள். அவர்களை சலாகடி மஸ்ஜித் பாரா என்ற கிராமத்தில் சந்தித்தோம். லபி ஒரு பிரபல தலைவர். (All Bodo Territorial Council Minority Students' Union) என்ற சங்கத்திற்கு தலைவர். போடோலாண்டில் சண்டையும் சச்சரவுமாக இருக்கும் நிலையில் அவர் வெவ்வேறு சமூகங்களை சேர்த்து மத சார்பில்லாத முன்போக்கான பார்வையுடன் அந்த சங்கத்திற்கு தலைமை வகுத்தார். எல்லா சமூகங்களிடமும் நல்ல பேர் பெற்று மிகவும் பிரபலமானார். வெறுப்பு அரசியலை அடிப்படையாக கொண்டவர்களுக்கு அவருடைய தலைமை பிடிக்காமல் இந்த வருடம் ஆகஸ்டு ஒன்றாம் தேதி இரண்டு பேர் அவரை பட்ட பகலில் சந்தடியான மார்க்கெட் இடத்தில் சுட்டுக் கொலை செய்தார்கள். அவர் சவ ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டார்கள்.

இது வரை கொலை செய்தவர்களை கண்டு பிடிக்கவில்லை.

அஸ்ஸாமை விட்டுச்சென்றபோது மனசு மிகவும் நோகியிருந்தது. அங்குள்ள அரசாங்கம் நேராகவே இந்த வெறுப்பு அரசியலை ஆதரிக்கிறது. இங்கே சிறுபான்மையோர் மிகவும் பயத்திலும் திகிலுமாக வாழ்க்கை நடத்துகிறார்கள். இந்திய அரசமைப்பில் சொல்லப் பட்ட சமத்துவம், சம உரிமைகள், மற்றும் மதசார்பின்மை போன்ற கொள்கைகளில் நம்பிக்கை கொண்டவர்கள் அஸ்ஸாம் சிறுபான்மையோருக்கு ஆதரவாக இருப்பது மிக அவசியம்..

## <u>மூன்றாம் நாள்</u>

மேடும் பள்ளமுமாக இருந்த பாதையில் பஸ்ஸில் பிரயாணம் செய்து ஜார்கண்ட் மாகாணத்தில் உள்ள கிரித் என்ற கிராமத்திற்கு வந்து சேர்ந்தோம். வழியில் கௌரி லங்கேஷ் கொலையை எண்ணிய போது, சிறுபான்மையோர், தலித்துகள் மட்டுமல்ல, இவற்றை எதிர்த்து, நமது அரசமைப்பு கொள்கைகளை நிலை நாட்டுவதற்காக போராடும் மனிதர்களும் கொலை செய்யப் படுகிறார்கள் என்பதை நினைத்து மனது மிகவும் சோர்ந்தது. அதே சமயத்தில் இந்த யாத்திரை எவ்வளவு முக்கியமானது என்பதையும் மனது அறிந்தது.

கிரித் கிராமத்தில் கம்படி பட்ட ஒரு கிழவர் –உஸ்மான் அன்சாரி – எப்படியோ உயிரோடு இருக்கிறார். இன்னும் தலை மறைவாக ஒளிந்து கொண்டு இருக்கிறார். உள்ளூர் வாசிகள் அவரை சந்திக்க அனுமதி கொடுக்கவில்லை. கடைசியில் எங்களை ஒரு சிலர் மாத்திரமே அவரை ரகசியமாக போய் சந்தித்தோம். மனதும் உடலும் மிகவும் பலஹீனமாக இருந்தார்.

28 July 2017 அன்று நடந்த சம்பவம். உஸ்மான் அன்சாரி குடும்பம் ஒரு ஹிந்துக்கள் உள்ள கிராமத்தில் ஒரே ஒரு முஸ்லிம் குடும்பம். திடீரென்று புலப்படாத வகையில் குப்பைமேடையில் ஒரு பசு மாடு தலை வெட்டப் பட்டு கிடந்தது. உச்மாந்தான் அதை கொன்றுவிட்டார் என்று உடனே ஒரு வதந்தி கிளம்பியது. கிராமத்தினர்கள் அவரை அடித்து நொறுக்கிப் போட்டது மட்டுமல்லாமல் அவர் வீட்டை கொளுத்திப் விட்டு அவரையும் கொளுத்துவதற்காக தயாரானார்கள். அப்போது சமயத்தில் போலிஸ் வருகையால் அவர் உயிர் தப்பினார்.

இங்கே ஒரு நம்பிக்கை தரும் செய்தி என்னவென்றால் அந்த போலிஸ் அதிகாரியின் பாத்திரம்தான். இளைஞரான அவர் மீதும் அவர் வண்டியின் மீதும் கல்லடி வீசும் மக்கள் நடுவில் தைரியமாக அந்த கிழவரை மீட்டு ஹஸாரிபாக் ஆஸ்பத்திரிக்கு கொண்டு சேர்த்தார். உஸ்மான் எட்டு நாள் மூர்ச்சையில் இருந்தார். பிறகு ராஞ்சி ஆஸ்பத்திரியில் இரண்டு மாதம் சிகிச்சை நடந்தது. அவருடைய தலையில் இன்னும் காயம் ஆறவில்லை; கை எலும்புகள் எல்லாம் நொறுங்கி விட்டன.

இது எல்லாம் நடந்த போது அவரை காப்பாற்ற அந்த கிராமத்தில் யாரும் முன்னுக்கு வரவில்லை. சம்பவத்திற்கு பிறகும் கூட அவருக்கு யாரும் உதவி செய்ய முன் வரவில்லை. அரசாங்கமும் அவருக்கு எந்த பணஉதவியும் தரவில்லை. இவையெல்லாம் சொல்லும்போது உஸ்மான் அடிக்கடி அழுதுகொண்டிருந்தார். அவருடைய பிள்ளைகள் பிச்சை எடுத்து அவருக்கு வைத்தியம் செய்தார்கள் என்றும், அவருடைய பிள்ளைகளில் ஒருவர் இந்த சம்பவத்தால் பைத்தியமாகிவிட்டான் என்றும் கூறினார். ஆனால் மறுபடியும் அந்த கிராமத்திற்கு திரும்பிச் செல்வேன் என்று சொன்னார், ஏனென்றால் வேறெங்கே செல்வது, அந்த கிராமம் தானே சொந்த ஊர் என்று என்கிறார்.

இதையெல்லாம்விட அங்கே நடந்த கூட்டத்தில் கிராமத்தினர் பேசியதுதான் எங்களுக்கு இன்னும் மிகமிக வருத்தம் தந்தது..முன்னூறு பேர் கூடியிருந்தார்கள். உச்மான்தான் பசுவை கொலை செய்தார் என்று திண்ணமாக நம்பினார்கள். ஏன் நீங்கள் எங்கள் மனிதர் கைது செய்யப் பட்டபோது வரவில்லை என்று கேட்டார்கள். கூட்டத்தை கலைப்பதற்கு கால் சுட்டு நடந்தபோது ஏன் நீங்கள் வரவில்லை என்று கேட்டார்கள். தாதிரியில் அகலக் கான் கம்படி பட்டபோது கேட்ட அதே வாதம்-பிரதிவாதங்கள். . முஸ்லிம்களே தவறு செய்கிறார்கள் என்றும், இந்துக்கள் தேசபக்தி

உள்ளவர்கள் என்றும் அடித்துச் சொன்னார்கள். நியாயம், மனிதாபிமானம் இவற்றிற்கெல்லாம் அங்கே இடமில்லை. இவற்றை பற்றி நாங்கள் பேச்செடுத்தபோது அவர்களுக்கு கோபமும் ஆத்திரமும் இன்னும் மேலாகியது. முன்போக்கான இடது சாரி நிறுவனங்களில் இருந்த பெரும்பான்மை சமூகத்தை சேர்ந்தவர்கள் கூட அதையே சொன்னார்கள்.

லங்கேஷ் கொலை, மனிதாபிமானம் மறந்த பெரும்பான்மை சமூகம்- இந்த இரண்டும் எங்களுடைய இந்த அன்பு யாத்திரையின் அவசியத்தை எங்கள் மனதிலே இன்னும் திடமாக ஊன்றி நாட்டி வைத்தது.

**<u>நான்காம் நாள்</u>**

எதிர்பாராத விதத்தில் மனதில் உள்ள புண்கள் ஆறும் வகையில் நான்காம் நாள் ஆரம்பித்தது. ராம்கர் ஜில்லா தலைநகரான ராம்கரில் நாங்கள் ஒரு தர்மசாலையில் தங்கியிருந்தோம். அங்கே உள்ள குருத்வாரா எங்களை அழைத்து எங்கள் யாத்திரைக்கு ஆதரவு அளித்தது. அங்கே பேசிய அனைவரும் குரு நானக் மற்றும் கபீர் போன்ற ரிஷி முனிகளை மேற்கோள் காட்டி மத சமரசம் மற்றும் பரஸ்பர சகிப்புத்தன்மை பற்றி எடுத்துக் கூறினார்கள். அங்கே இருந்த சீக்கியர்கள் இந்திய பார்டிஷன் போது வந்து சேர்ந்தவர்கள். சீக்கியர்கள் இரண்டு முறை வெறுப்பு அரசியலுக்கு பலியானவர்கள்-1947, 1984. அந்த சம்பவங்களை நினைவு கூர்ந்து மக்களுக்கு வருங்கால பிள்ளைகளுக்கு சிறுபான்மையோரை குறிவைத்து செய்யும் வெறுப்பு வன்முறையைப் பற்றியும் அதன் விளைவுகளையும் பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும் என்று வறியுறுத்தினர்.

அடுத்து நாங்கள் ராம்கர் ஜில்லாவில் உள்ள மனுவா கிராமத்திற்கு சென்று அங்கே மரியம் கடுன் என்ற பெண்மணியை சந்தித்தோம். இரண்டு மாதம் முன்பு அவர் கணவரை சந்தடியுள்ள ராம்கர் மார்க்கெட்டில் கம்பாலடித்து கொன்று போட்டார்கள்.

27 ஜூன் 2017 அன்று காலை  கரி வியாபாரியான அமீலுத்தின் தன் காரில் கிளம்பினார். ஒரு மணி நேரம் பிறகு அவருடைய பிள்ளை , பதினேழு வயது அவனுக்கு ஒரு Whats App video ஒன்று வந்தது. அதில் பசுக்காப்பார் குழு அவனுடைய அப்பாவை கம்பால் அடித்து நொறுக்கும் வீடியோ வந்திருந்தது. அவன் உடனே அவன் மோட்டார் சைக்கிளில் கிளம்பி அவனுடைய அண்ணாவுக்கு போன் செய்து விட்டு மார்க்கெட்டிற்கு சென்றான். அங்கே அவர்களுடைய கார் எரிந்து கரியாக இருந்தது. அங்கிருந்த ஜனங்கள் அவனுடைய அப்பாவை  ராஞ்சி ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றுவிட்டார்கள் என்று சொன்னார்கள். உடனே ராஞ்சிக்கு சென்றார்கள். அங்கே அவர் மார்கெட்டிலேயே இறந்து விட்டார் என்று தெரிந்தது. போலீசார் அவசர அவசரமாக போஸ்ட் மார்டம் செய்து உடலை நாடு ராத்திரி ஒப்படைத்தார்கள்.

இந்த கம்பாடிகளில் ஒரு புதிய விஷயம் என்னவென்றால் அதை வீடியோ செய்து காண்பிப்பது. கம்படி செய்வோரே அதை விதாவும் செய்து காண்பிக்கிறார்கள். உயிருக்காக அவர் பிச்சை கேட்கும்போது அவர்கள் சிரிக்கிறார்கள் ஒரு பையன் அவரது முகத்தை திருப்பி நன்றாக போட்டோ இடு என்று வேறு கூறுகிறான். சிவப்பு மாமிசம் அங்கே சிதறி இருக்கிறது. ஆனால் அவில் காரிலிருந்து எடுத்ததாக காணவில்லை. யாரும் அவருக்கு உதவி செய்ய முன்வரவில்லை.

மாகாண அரசாங்கமும் அந்த குடும்பத்திற்கு எந்த உதவியையும் தரவில்லை. அவருடைய சிறிய பிள்ளைகள் பள்ளிக்கூடத்திலிருந்து நின்றுவிட்டனர். இறைச்சியை அது பசுமாடு இறைச்சியா என்று பரீக்ஷை செய்வதற்கு அனுப்பினார்கள். வீடியோவில் தெளிவாகத் தெரியும் தாக்குதல் செய்த குற்றவாளிகளை போலீசார் ஏன் கைது செய்யவில்லை என்று எதிர்ப்பு செய்தார்கள். குற்றவாளிகளை கைது செய்யாமல் எதிர்ப்பு செய்தவர்களை போலீசார் கைது செய்து 25 நாள் ஜெயிலில் வைத்தனர். தாக்குதல் நடத்திய சில பேர்களை சில நாட்கள் பிறகு கைது செய்தார்கள். இன்னும் பல பேர் தப்பித்துக் கொண்டு திருகிராரகள். வீடியோவில் ஒரு பையன் போலீசார் அடிக்கும் தடிபோல் ஒன்றை எடுத்துக் கொண்டதைக் கண்டோம்.

அவருடைய மனைவி மரியம் கடுன் மிகவும் அமைதியாகவும் திடமாகவும் எங்களிடம் கூறினார் : “எங்களுக்கு நியாயம் வேண்டும். கணவரை அடித்துக் கொன்றவர்கள் தண்டிக்கப் பட வேண்டும். பழி வாங்குவதற்காக அல்ல; வருங்காலத்தில் இந்த மாதிரி சம்பவங்கள் நடக்கக் கூடாது, நானும் எங்கள் குழந்தைகளும் பட்ட கொடுமையும் வேதனையும் வேறு யாருக்கும் வரக் கூடாது என்பதுதான் என் எண்ணம்.”

ரம்கரில் நடந்த பொதுக்கூட்டத்தில் கொலையை அங்கீகரிக்காமல், அதை எதிர்த்து பேசாமல் இருந்தது தவறுதான் என்று ஒப்புக் கொண்டார்கள். தாங்கள் எதிர்த்து பேசாமல் இருந்தது அந்த குற்றத்தில் பங்கு கொண்டதுபோல்தான் என்றும் பேசினார்கள். அமன் மனிதாபிமான கௌன்சில் ஏற்பாடு செய்யவும் முன் வந்தார்கள். வெறுப்பு அரசியலை எதிர்ப்போம் என்றும், அவற்றில் பலியான குடும்பங்களுக்கு ஆதரவு கொடுப்போம் என்றும் தீர்மானித்தார்கள்.

மதியம் நாங்கள் ராஞ்சி போய் சேர்ந்தோம். அங்கே ஒரு கிறிஸ்துவ சமூகம் ஒரு பெரிய கூடத்தை ஏற்பாடு செய்திருந்தது. மத மாற்றுதல் பற்றிய சட்டம் ஒன்று சமீபத்தில் அரசாங்கம் கொண்டு வந்ததை அவர்கள் எதிர்த்தார்கள். கிறிஸ்துவர்களின் மனதில் பயம் ஏற்படுத்துவதற்காகவே இந்த சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்றும், ஆடிவசிகளின் சமூகத்தை கலித்துப் பிரித்து வைக்கிறார்கள் என்றும் கூறினார். ஆதிவாசிகள் ஒரே குடுமபத்திலேயே ஒருவர் கிறிஸ்துவராக இருக்கலாம், இன்னுமொருவர் அவர்களுடைய சர்னா என்ற பரம்பரை தெய்வங்களை பூஜிக்கலாம், இன்னொருவர் இந்து மதத்தை சேர்ந்தவராக இருக்கலாம் என்ற நிலைமை.

கூட்டத்தில் பேசியவர்கள் சிறுபான்மையோரை குறி வைத்து நடத்தும் வன்முறையை வெகுவாக கண்டித்து அடக்கப் படும் மக்கள் ஒத்துணர்வுடன் இந்த வன்முறை செய்களை எதிர்க்க வேண்டும் என்று வற்புறுத்தினர்.

பிரயாணம் மறுபடியும் தொடங்கியது. இப்போது கர்நாடகாவில் உள்ள மங்களூர் சென்று கௌரி லங்கேசுக்கு அஞ்சலி செய்து விட்டு வேறு சில குடும்பங்களை சந்திக்க கிளம்பினோம்.

**ஐந்தாம் நாள்**

மங்களூரில் திருமதி வித்யா தினகர் மற்றும் சம்வார்தா அவர்களை எங்களை வரவேற்று கேரளாவுக்கு அருகே எல்லையிலுள்ள கிராமத்துக்கு அழைத்து சென்றார்கள். அப்துல் ஷாமீர் தினக்கூலி செய்து பிழைப்பவர். 13 வயதில் பம்பாய்க்கு சென்று அங்கே ஒரு ஹோடலில் வேலை செய்து பிறகு பல வேலைகள் மாறி, மத்திய கிழக்கு தேசங்களில் இரண்டு வருடம் கழித்துவிட்டு, திரும்பி மங்களூருக்கு வந்து ஆட்டோ ரிக்ஷாவண்டி ஒட்டிப் பிழைப்பவர். தாக்குதல் முன்பு இருபது நாள் முன்பு அவர் இன்னொரு வேலைக்கு மாறினார். விவசாயிகள் விற்கும் பழைய மாடுகளை ஒரு டெம்போ வண்டியில் ஏத்திக் கொண்டு செல்வது. இந்த வேலையில் ஒரு நாளுக்கு ஆயிரம் ரூபாய் கூலி கிடைத்தது.

ஆகஸ்டு 23 , 2014 நாள் அவர் மங்களூரில் டெம்போவை ஓட்டிச்சென்று கொண்டிருந்தபோது ஒரு பஸ் அவருடைய வண்டியை நிறுத்தியது. அதிலிருந்து பஜரங்க தளத்தை சேர்ந்தவர்கள் குதித்து திரிசூலங்கள், மற்றும் கம்புகளால் அவர் வண்டியையும் அவரையும் தாக்கினார்கள். அந்தக் கூட்டத்தில் ஒரு ஆட்டோ டிரைவரும் இருந்தார். அவன் பல முறை ஷாமீருடன் மாட்டிறைச்சி உணவு உண்டிருக்கிறார். ஷாமீர் தன்னை காப்பாற்றச் சொல்லி அவரை கூப்பிட்டார். ஆனால் அவன் கூட்டத்துடன் சேர்ந்து கொண்டு அடித்துக் கொண்டிருந்தான். கடைசியில் ஒருவர் ஷாமீரின் தலையில் திரிஸூலத்தை குத்திச் சொருகினார். அவ்வளவுதான். ஷாமிர் மூர்ச்சையாகி விட்டார். அதற்கு பிறகு அவருக்கு எதுவும் ஞாபகமில்லை.

சம்பவம் நடந்த எதிரே போலிஸ் சௌகி இருந்தது. அவர்கள் வெகு நேரம் கழித்து வந்து ஷாமிரை ஆஸ்பத்திரிக்கு எடுத்து சென்றார்கள். அவருடைய குடும்பம் அவர் வெகு நேரமாக வரவில்லையே என்று கவலைப்பட்டு அவரது மொபைல் போனில் அழைத்தபோது ஆஸ்பத்திரியில் ஒரு நர்ஸ் அதற்கு பதிலளித்தபோதுதான் அவர்களுக்கு விஷயம் தெரிய வந்தது. போலீசார் அவர்களுக்கு செய்தி எதுவும் தரவில்லை.

அவருடைய தந்தை அவரை பிரைவேட் ஆஸ்பத்திரியில் சேர்த்து நான்கு மாதம் சிகிச்சை செய்வித்தார். நாலு லக்ஷம் ரூபாய் செலவாகியது. அவர் தன வீட்டை

விற்றார்; மகளின் கல்யாணத்திற்காக சேர்த்து வைத்திருந்த பணத்தையெல்லாம் செலவிட்டார். ஷாமீர் எப்படியோ பிழைத்தெழுந்தார். அவருடைய மனைவி அவரை பச்சை குழந்தை போல் இரவும் பகலும் தூக்கித் தூக்கி சிகிச்சை செய்து காப்பாற்றினார்.

அதற்கு பிறகு அவர் குடும்பத்துக்கு எதிர்பாராதவகையில் பல பேர் முன் வந்து நன்கொடை செய்தார்கள். டெலிவிஷனில் அவர் தாக்குதலை பற்றிய உணர்ச்சியுடன் கூடிய செய்தி வந்த பின் பலர் நன்கொடை செய்து ஆஸ்பத்திரி செலவு, அவருடைய தங்கை கல்யாண செலவு போன்றவற்றை ஏற்றுக் கொண்டார்கள். ஆட்டோ ரிக் யூனியன் ஒரு லக்ஷம் வரை ஆஸ்பத்திரி செலவுக்கு பணம் சேர்த்து கொடுத்தார்கள். சமீபத்தில் ஒரு பெண்மணி அவருடைய வீட்டை மீட்டுவைக்க ( பன்னிரண்டு லக்ஷம்ரூபாய் மதிப்பு )பாதி செலவை ஏற்று கொண்டார்; அடுத்த பாதியை பலபேர் முன் வந்து ஏற்றுக் கொண்டனர்.

இன்று அவர் மெதுவாக நடக்கிறார், குழறலாகப் பேசுகிறார். மூளை பரவாயில்லை, பாதிக்கப் படவில்லை. தெளிவாக இருக்கிறது. ஆனால் அவர் வாழ்நாள் முழுதும் அங்கஹீனராகவேதான் இருப்பார்.

இவ்வளவு நடந்த பிறகும் அவருக்கு நியாயம் இன்னும் வந்து சேரவில்லை. போலீசார் நாலு பேரை மட்டும் கைது செய்து பெயிலில் விடுதலை செய்தார்கள். கோர்ட்டில் கேஸ் இன்னும் ஆரம்பிக்கவில்லை. போலீசார் 1964 ஆண்டு பசு வதை சட்டம் கீழே அவர் மீது கேஸ் போட்டிருக்கிறது. முன்காப்பு பெயிலில் அவர் வெளி வந்தார்.

கர்நாடகாவில் காங்கிரஸ் கட்சி ஆளுமையில் இருந்தும் இவ்வளவு பெரிய கோரம் நடந்திருக்கிறது என்பது குறிப்பிட வேண்டிய விஷயம்.

**6 நாள்**

கர்நாடகாவில் பஜ்ரங்க தளம் செய்யும் இம்சைக் கொடுமை கொஞ்சநஞ்சம் இல்லை. அவன் பெயர் ஹரீஷ் பூஜாரி. மேலும் படிக்கும் முன் ஒரு முறை அவனுடைய போட்டோவை பாருங்கள். கைகளை இதய முத்திரையில் வைத்துக் கொண்டு சிரிக்கிறான். அவனை முஸ்லிம் என்று தவறாக எண்ணி கம்படி செய்து கொன்று போட்டார்கள். அதனால் மட்டும் கம்படிக்கொடுமையின் விளைவுகள் குறைந்து விடுமா? அவன் நண்பன் சமியுல்லாஹ் இன்று பிழைத்து இருந்தாலும் முஸ்லிம்களைக் குறி வைத்து செய்யும் இம்சையின் கொடுமை குறைந்து போகிறதா?

ஹரீசஷுடைய அப்பா பீடி சுற்றி பிழைப்பவர். அதனால் ஹரீஷ் ஒன்பதாவது கிளாசில் படிப்பை நிறுத்தி விட்டு எலக்ட்ரிசியன் வேலையை கற்றுக் கொண்டு தான் சம்பாதித்த பணம் முழுவதையும் குடும்பத்துக்கு கொடுத்து வந்தான். நவம்பர் பன்னிரண்டாம் தேதி 2015 ஹரீஷ் வேலையிலிருந்து லீவெடுத்துக்கொண்டு நண்பர்களுடன் சின்ன சுற்றுலா போய் விட்டு வந்தான். அம்மா டீ பண்ணிக் கொண்டிருந்தாள். டீக்கு பால் வாங்கிவரேன் என்று போனவன் திரும்பவேயில்லை. அவன் அம்மா சீதம்மாவுக்கு

ராத்திரி முழுவதும் கவலை. கணவர் கான்சர் நோய் வந்து படுக்கையில் இருக்கிறார். பெண் மிதலக்ஷ்மி ஒரு கல்யாணத்துக்கு சென்றிருந்தாள். மறுநாள் காலையில் ஹரீஷ் உடம்பு திரும்பி வந்தது. பதினான்கு முறை கத்தியால் குத்தப்பட்டிருந்தான். அம்மாவுக்கு ஒன்றும் புரியவில்லை. எப்படி, யார் செய்த கொடுமை இது?

விசாரணையில் தெரிந்த விஷயம் இது: அவன் பால் வாங்கி திரும்பும்போது அவனுடைய நண்பன் சமீருல்லா அந்த பக்கம் தன் மோட்டார் சைக்கிளில் போய்க்கொண்டிருன்தவன், ஏறிக்கோ நான் மோட்டார் சைக்கிளில் வீட்டிற்கு கொண்டு விடுகிறேன் என்று ஹரிஷை ஏற்றிக்கொண்டு வந்தபோது ஒரு பஜரங்க தளக்கூட்டம் அவர்களை கத்தியால் கொன்று போட்டார்கள். இருவருக்கும் தீவிர காயம்; சமீருல்லா கடைசியில் எப்படியோ பிழைத்தெழுந்தான், ஹரீஷ் குடலை பிடுங்கி போட்டதால் அவன் அங்கேயே இறந்து போனான். அந்த பஜரங்க தள ஆட்களுக்கு ஹரிஷையோ சமீருல்லாவையோ தெரிய கூட தெரியாது. எங்கிருந்து வந்தது இந்த வெறுப்பு? இந்த சோகம் தாங்காமல் அவன் அப்பா இரண்டு மாதம் பிறகு இறந்து போனார். இப்போது மிதலக்ஷ்மி ஒரு டிராவல் ஏஜென்சியில் வேலை செய்கிறாள். அவர்களுடைய துக்கத்தில் பங்கு கொள்வதை தவிர அவர்களுக்கு எப்படி ஆறுதல் சொல்ல முடியும்?

சோகச்சுமையோடு நாங்கள் மங்களுறு வந்து சேர்ந்தோம். அங்கே பல பேர் அமன் சபா கூட்டத்திற்கு வந்து காத்திருந்தார்கள். எல்லோருடன் சேர்ந்து கொலை பட்ட பத்திரிக்கையாளர் கௌரி லங்கேசுக்கு அஞ்சலி செய்தோம். கடற்கரையை ஒட்டிய கர்நாடக பிரதேசங்கள் மத சமரசத்திற்கு பேர் போனது. அங்கு வந்திருந்த எல்லோரும் அமன் இன்சானியத் சிடிசன் கௌன்சில் ஒன்று ஏற்படுத்தி மறுபடியும் மத சமரசத்தைக் கொண்டு வருவோம் என்று தீர்மானித்தார்கள்.

மத்தியானம் கிருஷ்ணபுடா என்ற கிராமத்திற்குச் சென்றோம். 19 April 2014 காங்கிரஸ் அரசாங்கம் ஆளுகைக்கு வந்த பின் நடந்த சம்பவம். இம்தியாஸ் சொன்ன விஷயம்: அவனுடைய தம்பி , 22வயதானவன் வீடுகளில் பெயின்ட் அடிப்பக்கும் வேலை செய்துகொண்டிருந்தான். சில நாட்கள் பிறகு அவனுக்கு பெயின்ட் அல்லேர்ஜி வந்து விட்டது. அதனால் அதை நிறுத்தி விட்டு வேறே வேலை தேடிக் கொண்டிருந்தான். கர்நாடகாவில் சட்டம் வயதான மாடுகளை வெட்ட அனுமதிக்கிறது. மாடுகளை ஓட்டும் வண்டிக்கு, டிரைவருக்கு நல்ல ஊதியம் கிடைக்கும். அந்த ஒரு வண்டியில் அவனுக்கு வேலை கிடைத்தது. விவசாயிகள் தன் வயதான மாடுகளை ஷிமோகா மார்க்கெட்டுக்கு அனுப்பி விற்றார்கள். அங்கிருந்து அவை கடற்கரை ஊர்களுக்கு அனுப்பப் பட்டன. போகும் வழியில் செக்போஸ்டில் போலிசுக்கு பணம் கொடுக்க வேண்டும். கபீரை சாங்கிரி என்ற ஊரில் தானிகோட் என்ற செக்போஸ்டில் நிறுத்தி பணம் கேட்டார்கள்; பணமும் கொடுத்தாகிவிட்டது. ஏதோ காரணமாக அங்கே வாக்குவாதம் ஆரம்பித்து முற்றியது. போலீசார் ஒருவர் முதலில் வானத்தைப்பார்த்து சுட்டார்; உடனே டிரைவர், கிளீனர், லோடர்கள் எல்லோரும் ஓடித்தப்பித்துக் கொண்டார்கள். கபீர் மட்டும் சுட்டுக் கொல்லப்பட்டான். அங்குள்ள போலீஸ் போஸ்டு நக்ஸ்லைட்டுகளுக்காக மாத்திரமே அமைக்கப் பட்டது. அவர்களுக்கும் பசுக்களுக்கும்

சம்பந்தமில்லை. இருந்தாலும் எதற்கு ஒரு மனிதனை கொன்றுபோட வேண்டும்? இந்த சம்பவத்தைப் பலர் எதிர்த்ததால் அந்த கான்ஸ்டபில் மேல் கேஸ் போடப் பட்டது. இப்போது அந்த கேசை விசாரணை முடியுமுன்பே குளோஸ் செய்ய முயற்சி நடக்கிறது.

**ஏழாம் நாள்**

ஒரு நாள் பிரேக் எடுத்தபிறகு நாங்கள் தில்லியில் மறுபடியும் கூடி பத்து நாள் பஸ் பிரயாணத்திற்கு ரெடி ஆனோம். நான்கு மாகாணங்கள் செல்வதாக திட்டம்.

காலையில் குடுப் மினார் அருகே உள்ள உமீது அமன் சிநேக கரில் (Ummeed Aman Sneh Ghar) கூடி ராஜகாட்டுக்குச் சென்று மகாத்மா காந்திக்கு அஞ்சலி செய்து திலக் விஹாருக்கு பிரயாணம் ஆனோம். 1984 இல் இந்திரா காந்தி கொலை பட்ட மறுநாள் அங்கே பெரிய கலகம் ஏற்பட்டு 3000 சீக்கியர்கள் கொளை செய்யப்பட்டார்கள். 33 வருடங்கள் ஓடிவிட்டன. ஆனாலும் அந்த விதவைகள் ஏழ்மையுடன், குழந்தைகளுடன், மனது பேதளிக்கும் சம்பவங்களை, அந்த நாளின் ஞாபகத்தை மனதில் காயமாக வைத்துக் கொண்டு எப்படி வாழ்க்கையை தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று  அவர்களுடன் சிறிது நேரம் பரிவுடன் கழிக்க வேண்டும் என்று சென்றோம். அவர்களுக்கு இன்னும் நோகிற விஷயம் என்னவென்றால் தாக்குதலை நடத்தியவர்கள் சிலரே தண்டனை அடைந்திருக்கிறார்கள். திட்டமிட்டு தாக்குதல் செய்தவர்கள் பலர் காப்பாற்ற படுகிறார்கள் என்பது அவர்கள் வேதனைப் படுகிறார்கள்.

அங்கே பெரிய பொதுக்கூட்டம் நடந்தது. பலர் செய்திகார்டுகளில் சந்தேசச்செய்தி எழுதி கயிற்றில் கட்டி தொங்கவிட்டிருந்தார்கள். ஒரு விதவை தனக்கு நடந்த கொடுமை உலகிலேயே வேறு யாருக்கும் நடக்க கூடாது என்று எழுதியிருந்தார். நாட்டில் வன்முறை செயல்கள் அதிகமாகின்றன என்று பலர் கவலை பட்டார்கள். வன்முறை செயல்கள் காதில் விழும்போதெல்லாம் அவர்களுக்கு 1984 இல் நடந்தவை எல்லாம்  ஞாபகத்திற்கு வந்து விடுகின்றன என்றும், வெவ்வேறு மத சமுதாயங்களைச் சேன்றவர்கள் சமரசமாகவும், அன்புடனும், அமைதியாகவும் வாழ்க்கை நடத்தவேண்டும் என்று ஒரே குரலெழுப்பினார்கள். பலர் பாட்டிலும் கவிதையிலும் இதே சந்தேசத்தைக் கூறினார்கள். புல்லே ஷா, ஃபைஸ், ஜாவது அக்தர், அத்னான் கஃபீல், தேவேஷ், சூரஜ் திவாரி, போன்ற கவிகளின் கவிதைகளை உருக்கமாக படித்தோதினார்கள்; ஃபௌசியா, சய்யதா ஹமீது, லோகேஷ் ஜெயின் போன்றவர்கள் நடித்துக் காட்டினார்கள். சாவித்திரி ஃபூலே குழுவினர் பாடியபிறகு, குழந்தைகள் பாங்கரா நடனம் செய்தார்கள். கடைசியில் எங்கள் பிரயாணத்தில் சேர்ந்து கொண்ட எல்லோரையும் (- எங்கள் குழுவில் டீச்சர்கள், பூஜாரிகள், விஞ்ஞானிகள்,

போட்டோ எடுப்பவர்கள், கவிஞர்கள், எழுத்தாளிகள், பத்திரிக்கையாளர்கள், மாணவர்கள், சமூக சேவை செய்பவர்கள், மேலும் பல ரங்கங்களில் பணிசெய்பவர்கள் இருந்தார்கள் -) மேடை மேல் அழைத்து மரியாதை செய்தார்கள். நாங்கள் எல்லோரும் சேர்ந்து அன்பைப் பற்றிய ஒரு பாட்டை பாடினோம். பிறகு குருத்வாராவில் எங்களுக்கு சாப்பாடு நடந்தது.

மேலும் பிரயாணம் செய்ய வேண்டிய நேரம் வந்து விட்டது. அடுத்து உத்தர பிரதேசத்தில் உள்ள ஷாம்லி என்ற என்ற ஊருக்கு புறப்பட்டோம்.

**8- வது நாள்**

ஷாம்லி ஜில்லாவில் உள்ள காண்ட்லா ஊருக்கு நாங்கள் நாடு ராத்திரி போய் சேர்ந்தோம். 2013 ஆண்டு முசஃபர்நகர் கலகத்திற்கு பிறகு அங்கே முஸ்லிம்களை திரும்பி வர அனுமதிக்கவில்லை. அதனால் அவர்களை இங்கே வசிக்க வைத்தார்கள். அப்போதிலிருந்து இந்த ஊரில் முஸ்லிம்கள் இந்துக்களைவிட அதிகமானார்கள். பாஜபா கட்சி எம்பி ஹுகம் சிங்க் முஸ்லிம்கள் இங்கே அமைதியை விரும்பும் இந்துக்களுக்கு பயமுறுத்தலாக இருக்கிறார்கள் என்றும், இந்துக்கள் இந்த ஊரை விட்டு வெளியேறுகிறார்கள் என்றும் ஒரு புரளியை கிளப்பினார். இது சுத்த புரளி என்று நிருபிக்கப்பட்டாலும் முஸ்லிம்கள் மேல் சந்தேகம் இருந்தது. NHRC – நேஷனல் ஹுமன் ரைட்ஸ் கமிஷன்- தேசிய மானிட உரிமை கமிஷன் - கூட இந்த புகாரை விசாரித்தது; ஆனால் கலகத்திற்கு பிறகு ஒரு லக்ஷம் மேல் முஸ்லிம்கள் முசஃபர்நகரை விட்டு ஓடிவந்ததைப் பற்றி எதுவும் செய்யவில்லை; அவர்களுக்கு எந்த உதவியும் கிடைக்கவில்லை. ஒரு ஊரையே இவ்வாறு மதவெறி சாயம் அடித்ததால் இந்த ஊரில்தான் நாம் தங்க வேண்டும் என்று முடிவு பண்ணினோம். அங்கே ஒரு மதரசாவில் தங்கினோம்.

காலையில் சஹாரான்பூர் ஜில்லாவில் உள்ள ஷபீர்பூர் என்ற கிராமத்துக்கு சென்றோம். அங்கே ரவிதாஸ் முனியின் கோவிலில் அம்பேத்கர் சிலையை வைக்க உள்ளூர் தலித்துகள் விரும்பினார்கள். பணம் சேர்த்து ஸஹாராநன்பூரில் சிலையை வார்க்க ஏற்பாடு செய்தார்கள். சிலையை வைக்க ஒரு உயரமான மேடையை கட்டினார்கள். ஏப்ரல் 14, 2017- அம்பேத்கர் பிறந்த நாள்- அன்று சிலையை திறந்து வைப்பது என்று எல்லாம் ரெடியாகி விட்டது .

இதற்கு நடுவில் பாஜபா கட்சி உத்தர பிரதேசத்தில் தேர்தலில் ஜெயித்தது. உள்ளூரில் ராஜபுத் ஜாதியை சேர்ந்தவர்கள் முணுமுணுக்க ஆரம்பித்தார்கள். அம்பேத்கருக்கு அவ்வளவு உயரமான மேடை அவசியமில்லை என்றும், எங்களுடைய ராஜ்ஜியம் வந்து விட்டது என்றும், சமார் ஜாதி தலித்துகளுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் என்று நினைத்தார்கள். சமார் ஜாதியினர் இதை எதிர்த்தனர். கோவில் நிலத்திற்கு

அவர்களுக்கு சட்டம் பிரகாரம் உரிமை இருக்கிறது என்றும், அங்கே யாருடைய சிலையை எப்படி அமைக்க வேண்டும் என்பது பற்றி தீர்மானம் செய்ய அவர்களுக்கு உரிமை இருக்கிறது என்றும் கூறினார்கள். இதற்குள் அரசாங்கம் தலையிட்டு சிலைக்கு அனுமதி கேட்டு வாங்க வேண்டும் என்று சொன்னது. அதனால் அந்த வருடம் சிலை வைக்க முடியாமல் போய்விட்டது.

மே 5 தாம் தேதி ராஜபுத்ர ஜாதியினர் மகாராணா பிரதாப் ஜெயந்தியை ஆரவாரமாக கொண்டாட விரும்பினார்கள். உரக்கமாக டிஜே சங்கீதத்திற்கு ஏற்பாடு செய்து ஊர்வலம் போக வேண்டும் என்று முடிவு செய்தனர். அப்போது சமார் ஜாதியினர் எங்களுடைய நிலத்திலே சிலை வைப்பதற்கு அனுமதி வேண்டும் என்றீர்கள் இப்போது பொதுச் சாலையில் உரக்க டிஜெயுடன் செய்யப் போகும் ஊர்வலத்துக்கு அனுமதி வேண்டாமா என்று போலிஸ் ஸ்டேஷனுக்கு சென்று கம்ப்ளெயிண்டு செய்தார்கள். போலீசார் அதை அடுத்து டிஜெவுக்கு அனுமதி கொடுக்கவில்லை

ராஜபுத் ஜாதியினர் இதை ஒரு மிகப்பெரிய அவமானம் என்று கருதி அக்கம்பக்க ஊரிலிருந்து அவர்களுடைய ஜாதியினரை எல்லோரையும் வரச் சொல்லி தலித்வாடாவை சுற்றிச் சூழ்ந்து கத்தியுடனும் வாள்களுடனும் பெண்கள், ஆண்கள் மேல் தாக்குதல் செய்து முப்பது மேலாக வீடுகளை எரித்து போட்டார்கள். அவர்களுடைய சாமான்களை எல்லாம் வெளியில் தூக்கி போட்டார்கள். தீ அணைப்பு வண்டியைக்கூட டிராக்டர்களையும் கார்களையும் நிறுத்தி வைத்து தடுத்தார்கள். இதையெல்லாம் போலீஸ் சுமார் ஐந்து மணி நேரம் சும்மா பார்த்துக் கொண்டே இருந்தது; தாக்குதலைத் தடுக்க முன் வர வில்லை.

இந்த சம்பவத்திற்கு நான்கு மாதம் பிறகு நாங்கள் சென்ற போது தலித்துகள் இன்னும் கோபமாக இருந்தனர். அவர்களில் பலர் பொருளாதார ரீதியில் மிகவும் ஏழைகள், நிலமோ சொத்தோ எதுவும் இல்லாதவர்கள், மேல் ஜாதியினரின் வயல்களில் அல்லது செங்கல் சூளையில் வேலை பார்த்தனர். இப்போது அவர்களுக்கு மேல் ஜாதியினர் வேலை கொடுப்பதில்லை. அரசாங்கம் 25,000 ரூபாய் கொடுக்க சாங்க்ஷன் செய்தது ஆனால் பணமில்லை, பட்ஜெட் இல்லை என்று கொடுக்க வில்லை. பல தலித்துகளை போலிஸ் கைது செய்து அவர்கள் ஜெயிலில் இருக்கிறார்கள்.

நூற்று கணக்கான வருடங்களாக தலித்துகள் அடங்கி ஒடுங்கி வாழ்கிறார்கள். ஆனால் ஷபீர்பூர் தலித்துகள் இந்த சம்பவத்தினால் பயந்து போய் வளைந்து கொடுக்க வில்லை. எல்லோரும் ஒன்று சேர்ந்து இந்து மதத்தைத் துறந்து, இந்து மத விக்ரகங்களை நீரில் போட்டு முழுக்கிவிட்டு, புத்த மதத்திற்கு மாறினார்கள். ஜெய் பீம் என்பது அவர்கள் முழக்கம்; குழந்தைகள் கூட ஜெய் பீம் என்று முழங்கி கூடப் படிக்கும் குழந்தைகளுடனும் வாத்யார்களுடனும் கூட தங்களுடைய உரிமைக்காக சண்டை

போடுகிறார்கள். மகளிரும் மிக தைரியமாக அவர்கள் மேல் நடந்த தாக்குதலை, குற்றங்களை விவரிக்க முன்வந்தார்கள்

யாத்திரையை சேர்ந்த சில பேர் ராஜபுத்திரர்களுடன் பேச முயன்றார்கள். அவர்கள் தலித்துகளை கேவலமாக பேசுவது மட்டுமில்லாமல் அவர்களே நஷ்ட பரிகாரத்திற்காக தங்களுடைய வீடுகளுக்கு தீ வைத்து கொளுத்திக் கொண்டார்கள் என்று கூறினர்! உடம்பில் காயங்களையும் தமக்குத் தாங்களே செய்து கொண்டார்களா என்று கேட்ட போது அவர்களிடமிருந்து பதிலில்லை. மொத்தத்தில் அவர்கள் எந்த விதமான வருத்தமும் தெரிவிக்க வில்லை.

ஷபீர்புரை விட்டபோது எங்கள் மனது கஷ்டமாகவும் அதே சமயம் உற்சாகமாகவும் இருந்தது. ஷபீர்பூர் தலித்துகள் செய்வது சமத்துவத்திற்காகவும் கண்ணியத்திற்காகவும் செய்யும் போராட்டம். அந்த போராட்டம் அவர்களுக்காக மட்டும் அல்ல; நாம் எல்லோருக்கும்தான்.

**9 –நாள்**

உத்தர பிரதேசத்தில் யோகி ஆதித்யநாத் முக்கிய மந்திரியாக (மார்ச் 19 2017) வந்ததிலிருந்து இரண்டு மூன்று நாளைக்கு ஒருமுறை என்கௌண்டர்கள் நடக்கின்றன. இதுவரை 30 என்கௌண்டர்கள் நடந்திருக்கின்றன. தினமும் அங்கே செய்தி தாள்கள் டீவி சானல்கள் இவற்றை பயங்கர குற்றவாளிகளை போலீசார் சுட்டுக் கொன்றதாக ரிபோர்ட் செய்கின்றன. இவர்கள் பயங்கர கிரிமினல்கள் என்றும், இவர்களை பிடிக்கும்போது அவர்கள் போலிசை சுட்டதாகவும். போலிஸ் தற்காப்பாக அவர்களை சுட்டதாகவும் இந்த சம்பவங்கள் ரிபோர்ட் செய்யப் படுகின்றன. மீடியா இவற்றை விசாரணை செய்வதில்லை. போலிஸ் என்ன சொல்கிறார்களோ அதையே எழுதுகிறார்கள். மீடியாக்காரகளுக்கு ஏன் இந்த என்கௌன்டர்களில் இறந்தவர்கள் கிட்டத்தட்ட எல்லோருமே முஸ்லிம்கள் என்று தோன்றுவதில்லை; அவர்கள் எல்லோருக்குமே முன்பு எந்த குற்றப் பதிவு - கிரிமினல் ரிகார்டு- இல்லை என்பதும் அவர்களுக்குப் படுவதில்லை; இந்த சம்பவங்களில் போலிஸ்கார்கள் யாருக்கும் காயம் ஏற்படுவதில்லை என்பதும் அவர்களுக்குத் தோன்றுவதில்லை.

பெயர் சொல்லாமல் ஒரு சம்பவத்தைப் பற்றி கூறுகிறேன். பெயர் சொன்னால் அவர்களை போலிஸ் துன்புறுத்தும் என்று அவர்களுக்கு பயம். அந்த குடும்பத்தில் அவர்கள் மகன், அவனுக்கு இருபது இருபத்தைந்து வயதிருக்கலாம், அவனுக்கு எந்த விதமான போலிஸ் ரிகார்டும் கிடையாது, அவனையும், அவன் நண்பன் ஒருவனையும் போலிஸ் அழைத்துச் சென்றது. அழைத்துச் சென்றதாக போலிஸ் ஸ்டேஷனில் பதிவு ஒன்றும் செய்ய வில்லை. கரும்பு வயல்களுக்கு அழைத்துச் சென்று ஓடச்சொன்னார்கள். அவர்கள் பயந்து போய் ஓடினால் முதுகில் சுடுவார்கள் என்று

ஓடவில்லை. போலிஸ் அவர்களை படுக்க வைத்து முழங்காலில், முழங்கையிலும் சுட்டார்கள்.

மறுநாள் அவர்கள் பயங்கர குற்றவாளிகள் என்றும், அவர்களை போலிஸ் சுடும்போது அவர்கள் ஓட முயன்றார்கள் என்றும், தற்காப்பாக அவர்களை சுட்டதாகவும் சொன்னார்கள். எப்படி கரும்பு வயல்களில் நாடு ராத்திரியில் அவர்கள் ஓடிக்கொண்டிருக்கும்போது அவ்வளவு கரெக்டாக முழங்கால் முழங்கையில் மட்டும் சுடப்பட்டார்கள் என்று யாரும் கேள்வி கேட்கவில்லை.

அந்த பையன் இன்னும் ஜெயிலில் இருக்கிறான். கடுமையான வலியுடன் வேதனைப் படுகிறான். அந்த குடும்பத்தினர் தினக்கூலி செய்பவர்கள். எல்லாப் பணத்தையும் மருந்துக்காகவும், ஜெயில் ஆஸ்பத்திரிக்கு போகவும் செலவு செய்து கொண்டிருக்கிறார்கள். வழக்கறிஞர் வைத்துக்கொள்வதற்கு அவரிடம் பணம் இல்லை. அவன் இனிமேல் நடக்க முடியுமா என்பது அவர்களுடைய கவலை. மேலும் அவன் குற்றவாளி அல்ல என்று நிருபித்துக் கொள்ள முடியுமா என்பது இன்னும் பெரிய கவலை.

இந்த மாதிரி கேசுகள் உத்தர பிரதேசத்தில் யோகி ஆதித்யநாத் முக்கிய மந்திரி ஆனா பிறகு சர்வ சாதாரணமாகி விட்டன. “எத்தனை இன்று” என்ற முறையில் இவை நடக்கின்றன. தேர்தலுக்கு முன்பு முஸ்லிம்கள்தான் அதிகமான குற்றங்களுக்கு காரணம் என்று புரளியை எழுப்பினார்கள். 2013 ஆண்டில் நடந்த முசஃபர்நகர் கலகத்திற்கு பிறகு முஸ்லிம்கள் அவர்கள் பெரும்பான்மையாக இருக்கும் ஊர்களுக்கு குடிபோனார்கள். குற்றவாளிகளான முஸ்லிம்களை சுட்டு கொன்றுபோட்டு குற்றங்களை தடுக்கிறார் என்று யோகி ஆதித்யநாத் என்று பொது மக்களிடையே ஒரு அபிப்ராயத்தை ஏற்றுவதற்காக எந்த ஒரு விசாரணையும் இல்லாமல் இந்த என்கௌண்டர்கள் செய்யப் படுகின்றன. இதற்கு முன்பு இருந்த அரசாங்கங்கள் தேர்தலில் வாக்குகளுக்காக முஸ்லிம்களை தவறாக முறையில் சலுகை காட்டினார்கள் என்றும், இதைத் தடுக்க ஆதித்யநாத் முக்கிய மந்திரியலேயே முடியும் என்று வதந்திகளை கிளப்புகிறார்கள். முன்பே கம்படிக்கு பயப்பட்டு வாழும் முஸ்லிம்கள் இப்போது நாடு ராத்திரியில் நடக்கும் சுட்டுக் கொலைகளுக்கும் பயப்பட வேண்டிய நிலைமையாகி விட்டது.

எங்களுடைய அடுத்த நிறுத்தம் ஷாம்லி ஜில்லாவில் குர்காவ்ன் என்ற கிராமம். அங்கே ஒரு கிழவர் தன் மகனை இழந்து வெகு நேரம் பேசவே பயப்பட்டார். அவரது மகன் 2013 ஆண்டில், அவனுக்கு அப்போதுதான் கல்யாணமாகியிருந்தது, அண்மையிலிருந்த ஹரியான மாகாணத்திற்கு வேலை தேடிக்கொண்டு மாடுகள் வியாபாரத்தில் இறங்கினான். அடுத்து கிழவருக்கு செய்தி வந்தது: ஒன்பது பேர் அவனை சூழ்ந்து அடித்து போட்டார்கள். அவனை பிரைவேட் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனார்கள்,

ஆனால் அவன் பிழைக்கவில்லை. போஸ்ட்-மார்டம் செய்யாமலேயே போலீசார் அவனுடைய சவத்தை அனுப்பிவைத்தார்கள். ஆனால் பலர் அரசாங்கம் மேல் குற்றச்சாட்டு செய்த போது அவன் சடலத்தை தோண்டி எடுத்து போஸ்ட்-மார்டம் செய்தார்கள். கிழவருக்கு இது இன்னும் துக்கத்தை அளித்தது. அவனுக்கு மேலுலகத்தில் என்ன கதி வருமோ என்று கவலைப் படுகிறார். நீதி கிடைக்கும் என்ற ஒரு நம்பிக்கைக்காகவே அவர் போஸ்ட்-மார்டத்துக்கு ஒப்புக் கொண்டார். ஆனால் போஸ்ட்-மார்டம் ரிபோர்ட்டை போலீசார் அவருக்கு தரவில்லை. அவருக்கு நியாயத்திற்காக நாங்கள் உதவி செய்வோம்  என்று உறுதி அளித்து நாங்கள் கிளம்பினோம். அவருக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையில்லை. போஸ்ட்-மார்டம் ரிபோர்ட்டு கிடைத்தால் விஷயம் தெரிந்து கொண்டு நான் ஜன்னத்துக்கு போவேன் என்கிறார்.

அந்த தந்தையின் ஞாபகங்களோடு நாங்கள் பிரயாணத்தைத் தொடர்ந்தோம். ஹரியானாவில் உள்ள மேவாட்டில் உள்ள னு என்ற இடம். கசெற என்ற கிராமத்தில்தான் நீங்கள் இரவை  கழிக்கவேண்டும் என்று உள்ளூர்வாசிகள் வற்புறுத்தினார்கள். ஏனென்றால் மகாத்மா காந்தி அங்கு வந்திருக்கிறார். காந்தி அங்கே எதற்கு வந்தார்? 1947 இல் இந்து-முஸ்லிம் கலகங்கள் நடந்தபோது அங்கிருந்த மியோமுச்லிம்கள் பாகிஸ்தானுக்கு புறப்பட கிளம்பினார்கள். மகாத்மா காந்தி அங்கே வந்து இந்துக்களுக்கு இந்தியாதான் வீடு என்றால் முஸ்லிம்களுக்கும், வேறு எல்லா மதத்தினருக்கும் இந்தியாதான் வீடு, முஸ்லிம்கள் இந்தியாவை விட்டு வெளியேறினால் இந்தியா வெறும் காலிபெட்டியாகிவிடும் என்று அவர்களுக்கு சொல்லி போதித்தார். மியோமுச்லிம்கள் அவரது வேண்டுகளை மதித்து ஒருவர்கூட பாகிஸ்தானுக்குச் செல்லவில்லை. இந்த காரனத்தல்தான் எங்களை அவர்கள் காரேச கிராமத்தில் தங்க சொன்னார்கள். அங்கே பாடுகளுடனும் கவிதைகளுடனும் அந்த சரித்திரத்தை நினைவு படுத்திக் கொண்டார்கள். ஆனால் ஒரு பையன் இதுவும் கூறினான்: இப்போது “ஒரு விசித்ரமான காற்று ஒன்று வீசுகிறது; தாய்நாட்டிலேயே நாங்கள் எங்களை வேறானவர்களாக உணர்கிறோம்” என்றான்.

ரயிலில் கொல்ல பட்ட ஜுனைதின் பெற்றோர்கள் அங்கு வந்திருந்தார்கள்.அவர்களை நான் முன்பே சந்தித்திருந்தேன். ஜுனைதீன் அம்மா என்னை ஒரு பக்கத்திற்கு அழைத்துச் சென்று ஒரு முக்கியமான விஷயம் உங்களுக்கு சொல்ல வேணும் என்றாள். அவளுடைய மகன் ஜூனைத் ஏதோ ஒரு பெரிய சாதனை செய்ய வேண்டும் என்று ஆசைப் பட்டான்; அது நடக்க முடியாமல் போய்விட்டது. அவன் இறந்து போனாலும் அவன் எந்த மாதிரி சாதனை செய்ய முடியும் என்று அவள் யோசித்து, ஒரு முடிவுக்கு வந்திருப்பதாக சொன்னாள். அவன் பேரில் பெண் குழந்தைகளுக்காக ஒரு பள்ளிக்கூடம் திறக்கவேண்டும் என்றும், அதில் உருது மட்டுமில்லாமல் இங்கிலிஷும் ஹிந்தியும் கூட கற்றுக் கொடுக்கவேண்டும் என்று கூறினாள். அந்த பள்ளிக்கூடத்தில்

முஸ்லிம் மகளிர் மட்டுமல்ல, கிறிஸ்துவ, மற்றும் இந்து பெண்களும் படிக்கவேண்டும் என்பது என் ஆசை என்று கூறினாள். ஜுனைதீன் நினைவுக்கு இது மிகவும் தகுந்த அஞ்சலி என்று பட்டது. ஜூனைதின் அம்மாவுக்கு மாத்திரம் அல்ல, நாம் எல்லோருக்கும் கூடத்தான்.

**10 ஆம் நாள்**

பத்தாம் நாள் அன்று ஜில்லாவிலேயே பதினொன்று குடும்பங்களை சந்தித்தோம். விவரமாக ஒவ்வொரு நிகழ்ச்சியையும் பற்றி எழுதணும் என்றால் பல பக்கங்கள் வேண்டி வரும், ஒத்திபோடவேண்டும். ஆனால் மொத்தத்தில் ஒரு பயங்கரமான நிலைமை உருவாகிக் கொண்டிருக்கிறது. அதைப்பற்றி எழுதுகிறேன். கும்பல்களால்

கும்பல்கலால் அடிக்கப்பட்டு முஸ்லிம்கள் கொலை செய்யப் படுகிறார்கள் என்பது தெரிந்த விஷயம். இன்னுமொரு கவலைக்கிடமான விஷயம் தெரிய வந்தது. என்னவென்றால் அதை விட நிறைய பேர்கள் பொலிசாரால் மதவெறிக்கு ஆளாகி கொலை செய்யப்படுகிறார்கள் என்பது. அதை விபத்துக்கு ஆளானார்கள் என்றோ, அல்லது அவர்கள் கொள்ளைக்காரகள் (அவர்கள் பேரில் ஒரு குற்ற ரிகார்டும் இருப்பதில்லை) என்று சொல்லி மறைத்து விடுகிறார்கள். கும்பல் கொலைகள், அல்லது என்கௌண்டர்கள் பிறகு போலிஸ் ரிகார்டில் அவர்கள் கொடுமையான முறையில் மாடுகளை கடத்திச் சென்றதாகவும், அப்போது வண்டி குப்புற விழுந்து விபத்து நேர்ந்ததாகவும், அதில் அவர்கள் மரணமடைந்தார்கள் என்றும் பதிவு செய்யப் படுகிறது. இந்த போலிசார்கள் எந்த விசாரணையும் இல்லாமல் தப்பித்துவிடுகிறார்கள்.

இந்த குடும்பங்களின் நிலைமை ரொம்ப பரிதாபத்துக்குரியது. நியாயத்துக்காக அவர்கள் முயற்சி கூட எடுக்கவில்லை. ஏனென்றால் அவர்களுக்கு நியாயம் கிடைக்காது என்று நன்றாகவே தெரியும். கம்ப்லேயிண்டு கூட கொடுக்கவில்லை. சிலர் இந்த ராஜ்யத்தில் போலீசாருக்கும் கும்பல்களுக்கும் முஸ்லிம்களையும் தலித்துகளையும் கொல்ல அனுமதி, சுதந்திரம் இருக்கிறது என்றார்கள். ஒரு ஜாதியில், ஒரு மதத்தில் பிறந்த காரணத்தையே ஒட்டி, மதவெறுப்பு கொண்டு அரசாங்கமே கொலைகளை செய்விக்கிறது என்பதை ஜீரணிக்க முடியவில்லை அவர்களுக்கு, நமக்கும் கூட. துக்கத்திலும், சோகத்திலும், வீழ்ச்சியிலும், இருக்கும் குடும்பங்களை, மகனை இழந்த பெற்றோர்களை, தந்தையை இழந்த அனாதைக் குழந்தைகளை மறுபடியும் மறுபடியும் சந்தித்தோம்.

எங்களுடைய பதினோராம் நாள் யாத்திரையில் நடந்த சம்பவங்கள் எதிர்பாராதது. ராஜஸ்தானில் பெஹ்லுகான் என்ற ஒரு வயதான முஸ்லிமை இந்த வருடம்

ஏப்ரல்மாதம் அவர் மாட்டு சந்தையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கும் போது அவர் பசு மாடுகளை ஏற்றுமதி செய்யவேண்டி கடத்துகிறார் என்று குற்றம் சாட்டி அவரை கம்படித்து கொன்றுபோட்டார்கள். அவர் சாகும்போது ஆறு பேரைக் குற்றம் சாட்டிக் கொடுத்த வாக்குமூலத்தைக் கூட தகுந்த சாட்சியம் இல்லை என்று போலிஸ் வாதாடி அவரது கேசை மூடிவிட்டார்கள். அவருடைய மகன் இப்போது மேல் கோர்ட்டில் வழக்காடிகொண்டிருக்கிறார்.

அவரை கொன்ற இடம் பெறோர் என்ற நகரத்துக்கு சென்று சில பூக்களை வைத்து அஞ்சலி செய்வது எங்கள் திட்டம். ஆனால் அல்வர் ஜில்லா அதிகாரம் எங்களுக்கு அனுமதி கொடுக்க மறுத்து விட்டது. ஒரு பெரிய கூட்டம் தடி கம்புகளை எடுத்து கொண்டு எங்களை வழி மறித்து அடிக்க காத்து கொண்டிருக்கிறது என்று ஜில்லா அதிகாரிகள் எங்களுக்கு சொன்னார்கள். எங்கள் சக பிரயாணிகளுடன் கலந்து ஆலோசித்து, சாந்தி துதர்களான எங்களை ஒரு வெறிக்கூட்டம் தடுக்க இடம் கொடுக்க கூடாது என்ற  எண்ணத்துடன் ஜில்லா அதிகாரிகளின் ஆர்டரை மீறுதல் என்று முடிவு பண்ணி, ஆனால் எல்லோரையும் ஆபத்துக்கு உள்ளாக்க வேண்டாம் என்றும், நான் மட்டும் பஸ்ஸிலிருந்து இறங்கி பூ அஞ்சலி செய்வது என்று முடிவெடுத்தோம்.”

“எங்கள் பஸ்ஸை பரோட் என்ற கிராமத்தில் தடுத்தார்கள். ஆச்சரியம் என்ன வென்றால் விடிகாலையில் எங்களை தேனிர் மற்றும் பூமாலைகளுடன் வரவேற்று வெறுப்பு அரசியலை எதிர்க்க வேண்டும் என்று அந்த கிராமத்தினரும் அந்த கிராம சர்பன்ச்சும்  உணர்ச்சி வசமாக சொற்பொழிவுகள்  ஆற்றினர்.

பெறோர் நகர போலிஸ் எங்களுக்கு அனுமதி கொடுக்க மறுத்தார்கள். ஒரு கூட்டம் தடிக்கம்புகளை எடுத்துகொண்டு தடியடி செய்ய முனைந்துள்ளார்கள் என்றார்கள். எனக்கு பெஹ்ளுகான் சம்பவத்திற்கு எதிர்ப்பு வெளியிட ராஜாங்கத்தின் படி சுதந்திரம் உண்டு என்றேன். போலிஸ் அதிகாரி உங்களை எதிர்க்க அவர்களுக்கும் ராஜாங்க சுதந்திரம் உண்டு என்றார். ஆனால் கம்படி செய்து ஹிம்சை-எதிர்ப்பு செய்ய அவர்களுக்கு ராஜாங்க சுதந்திரம் கொடுக்கவில்லை என்றேன். அப்படியே நீங்கள் சொல்வது சரியானால் ஒரு சில பூக்களுடன் அஹிம்சை அஞ்சலி செய்ய எனக்கும் ராஜாங்க சுதந்திரம் உண்டு என்றேன். நான் பஸ்ஸிலிருந்து இறங்கும்போது மறுபடியும் போலிஸ் என்னை மறித்தார்கள். நான் அங்கேயே தர்னாவில் உட்கார்ந்துவிட்டேன். என்னை கைது செய்யலாம் அல்லது அனுமதிக்கலாம் என்ற நிலைமை.  கடைசியில் என்னை  அனுமதித்தார்கள்.

நான் போலிஸ் அதிகாரிகள் சூழ சில சாமந்தி பூக்களை எடுத்துக்கொண்டு கொஞ்ச தூரம் நடந்து அவற்றை ‘நான் கடவுளை நம்பும் மனிதன் அல்ல, மனிதத்துவம், நீதியை நம்பும் மனிதன்; மனித்துவதுக்காகவும், நீதி வெல்ல வேண்டும் என்பதுக்காகவும், உன்னை போல் எவ்வளவோ பேர் கொல்ல பட்டிருக்கிறார்கள், அவர்களுக்காகவும்

இந்த பூக்களை சமர்ப்பிக்கிறேன்' என்று சொல்லி பூக்களை வைத்தேன். போலிஸ் அவசர அவசரமாக எங்களை பஸ்சுக்குள் அனுப்பினார்கள்.. பஸ் கிளம்பியது.. சில தூரத்தில் ஒரு கூட்டம் எங்கள் பஸ் மேல் கல்லடி செய்தது. நாங்கள் எங்கள் பிரயாணத்தை தொடர்ந்தோம்.

மறு நாள் பெஹறோர் என்ற இடத்துக்கு சென்று பெஹ்லு கான் கொள்ளப் பட்ட இடத்தில் மலர் அஞ்சலி செய்ய வேண்டும் என்பது எங்கள் திட்டம். ஆனால் இன்றே எங்களுடைய முயற்ச்சியை தடுக்க விச்வ இந்து பரிஷத், இந்து ஜாகரன் மன்ச், பஜரங்க தளம் ஆகியோர் கிளம்பியிருக்கிறார்கள் என்று செய்தி வந்தது. எங்களை வரவேற்கக் காத்திருக்கும் மக்களுக்கு அவர்கள் வந்தால் கல்லும் தடியும் வீசப்படும் என்று எச்சரிக்கை விட்டிருந்தார்கள். மீட்டிங் நடத்த ஏற்பாடு பண்ணிய கூடத்தைக் கூட கான்செல் செய்துவிட்டார்கள். வேறு யாரும் கூட மீட்டிங் நடத்த முன் வரவில்லை.

இதையெல்லாம் பார்த்து எங்களுடைய முடிவும் இன்னும் இறுதியானது. தாக்குதல் கும்பல் எதிர்த்தாலும் நாம் போய் திட்டமிட்டபடி பெஹலு கான் கொல்ல பட்ட இடத்தில் மலர் அஞ்சலி செய்வது என்று தீர்மானித்தோம்.

**பதினோராம் நாள்.**

எங்களுடைய பதினோராம் நாள் யாத்திரையில் நடந்த சம்பவங்கள் எதிர்பாராதது. ராஜஸ்தானில் பெஹ்லுகான் என்ற ஒரு வயதான முஸ்லிமை இந்த வருடம் ஏப்ரல்மாதம் அவர் மாட்டு சந்தையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கும் போது அவர் பசு மாடுகளை ஏற்றுமதி செய்யவேண்டி கடத்துகிறார் என்று குற்றம் சாட்டி அவரை கம்படித்து கொன்றுபோட்டார்கள். அவர் சாகும்போது ஆறு பேரைக் குற்றம் சாட்டிக் கொடுத்த வாக்குமூலத்தைக் கூட தகுந்த சாட்சியம் இல்லை என்று போலிஸ் வாதாடி அவரது கேசை மூடிவிட்டார்கள். அவருடைய மகன் இப்போது மேல் கோர்ட்டில் வழக்காடிகொண்டிருக்கிறார்.

அவரை கொன்ற இடமான பெஹறோர் என்ற நகரத்துக்கு சென்று சில பூக்களை வைத்து அஞ்சலி செய்வது எங்கள் திட்டம். ஆனால் அல்வர் ஜில்லா அதிகாரம் எங்களுக்கு அனுமதி கொடுக்க மறுத்து விட்டது. ஒரு பெரிய கூட்டம் தடி கம்புகளை எடுத்து கொண்டு எங்களை வழி மறித்து அடிக்க காத்து கொண்டிருக்கிறது என்று ஜில்லா அதிகாரிகள் எங்களுக்கு சொன்னார்கள். எங்கள் சக பிரயாணிகளுடன் கலந்து ஆலோசித்து, சாந்தி துதர்களான எங்களை ஒரு வெறிக்கூட்டம் தடுக்க இடம் கொடுக்க கூடாது என்ற எண்ணத்துடன் ஜில்லா அதிகாரிகளின் ஆர்டரை மீறுதல் என்று முடிவு பண்ணி, ஆனால் எல்லோரையும் ஆபத்துக்கு உள்ளாக்க வேண்டாம் என்றும், நான் மட்டும் பஸ்ஸிலிருந்து இறங்கி மலர் அஞ்சலி செய்வது என்று முடிவெடுத்தோம்.

எங்கள் பஸ்ஸை பரோட் என்ற கிராமத்தில் தடுத்தார்கள். ஆச்சரியம் என்ன வென்றால் விடிகாலையில் எங்களை தேனிர் மற்றும் பூமாலைகளுடன் வரவேற்று வெறுப்பு அரசியலை எதிர்க்க வேண்டும் என்று அந்த கிராமத்தினரும் அந்த கிராம சர்பன்ச்சும் உணர்ச்சி வசமாக சொற்பொழிவுகள் ஆற்றினர்.

பெஹறோர் நகர போலிஸ் எங்களுக்கு அனுமதி கொடுக்க மறுத்தார்கள். ஒரு கூட்டம் தடிக்கம்புகளை எடுத்துகொண்டு தடியடி செய்ய முனைந்துள்ளார்கள் என்றார்கள். நான் "ராஜாங்க அரசமைப்பு பிரகாரம் எனக்கு பெஹ்லுகான் சம்பவத்திற்கு எதிர்ப்பு வெளியிட சுதந்திரம் உண்டு" என்றேன். போலிஸ் அதிகாரி "உங்களை எதிர்க்க அவர்களுக்கும் ராஜாங்க சுதந்திரம் உண்டு" என்றார். "ஆனால் கம்படி செய்து ஹிம்சை-எதிர்ப்பு செய்ய அவர்களுக்கு ராஜாங்க சுதந்திரம் கொடுக்கவில்லை" என்றேன். "அப்படியே நீங்கள் சொல்வது சரியானால் ஒரு சில பூக்களுடன் அஹிம்சை அஞ்சலி செய்ய எனக்கும் ராஜாங்க சுதந்திரம் உண்டு" என்றேன். நான் பஸ்ஸிலிருந்து இறங்கும்போது மறுபடியும் போலிஸ் என்னை மறைத்தார்கள். நான் அங்கேயே தரையில் தர்னாவில் உட்கார்ந்துவிட்டேன். என்னை கைது செய்யலாம் அல்லது அனுமதிக்கலாம் என்ற நிலைமை. கடைசியில் என்னை அனுமதித்தார்கள்.

நான் போலிஸ் அதிகாரிகள் சூழ சில சாமந்தி பூக்களை எடுத்துக்கொண்டு கொஞ்ச தூரம் நடந்து அவற்றை "நான் கடவுளை நம்பும் மனிதன் அல்ல, மனிதத்துவம், நீதியை நம்பும் மனிதன்; மனித்துவதுக்காகவும், நீதி வெல்ல வேண்டும் என்பதுக்காகவும், உன்னை போல் எவ்வளவோ பேர் கொல்ல பட்டிருக்கிறார்கள், அவர்களுக்காகவும் இந்த பூக்களை சமர்ப்பிக்கிறேன்" என்று சொல்லி பூக்களை வைத்தேன். போலிஸ் அவசர அவசரமாக எங்களை பஸ்சுக்குள் அனுப்பினார்கள்.. பஸ் கிளம்பியது.. சில தூரத்தில் ஒரு கூட்டம் எங்கள் பஸ் மேல் கல்லடி செய்தது. நாங்கள் எங்கள் பிரயாணத்தை தொடர்ந்தோம்.

**12 நாள்**

ராஜஸ்தானில் முதல் நாள் பெஹலு கான் சம்பவத்தில் எங்களுக்கு கல்லடியும் செருப்படியும் கிடைத்தது; இரண்டாம் நாள் அஜ்மீரில் ரோஜாப்பூ மலர்களை சொரிந்தார்கள்! சந்தடியான சாலையில் நூற்றுக்கு மேல் வந்திருந்த மக்களோடு நாங்கள் ஊர்வலமாக மதசமரசத்தை, வெவ்வேறு மதசமுதாயத்திடையே ஒற்றுமை, வெறுப்பு அரசியலுக்கு எதிர்ப்பு பற்றி பாடிக்கொண்டும் ஸ்லோகன்களைக் கத்தி முழங்கிக் கொண்டு போனபோது எங்கள் மேல் ரோஜா மலரிதழ்களைச் சொரிந்தார்கள். நாங்கள் எதிர்பாராதவகையில் மக்கள் எங்கள் ராலியில் சேர்ந்தார்கள். முதலில் ஒரு குருத்வாரா எங்களை வரவேற்றது. பல கிறிஸ்துவ பாதிரிகளும் பாதிரி-துறவியரும் சேர்ந்து கொண்டார்கள். சிலர் 'அமன்', 'அமன்',' அமன்' (அமைதி) என்று மந்திரம் சொல்வது போல் உரைத்துக் கொண்டு சென்றார்கள். ஊர்வலம் சூஃபி முனிவரான க்வாஜா மொயினுத்தின் சிஷ்டி அவர்களின் தர்காவில் முடிந்தது. அங்கேயும் ரோஜா

மலரிதழ்களுடன் எங்களை வரவேற்று அன்பு யாத்திரை சமத்துவம், பரஸ்பர அன்பு இவற்றை போதிக்கும் முனிவர் சிஷ்டியின் தர்காவுக்கு வந்து சேர்ந்தது எவ்வளவு சரியானது என்று உரைத்தார்கள்.

ஆனால் அன்று பகல்பொழுது ஒரு இனிமையற்ற கடுமையான சூழ்நிலைக்குப் போனோம். நாகார் ஜில்லாவில் உள்ள தான்கவாஸ் என்ற கிராமத்தில் ஐந்து தலித்துகளையும் வேறு ஒருவரையும் அங்கிருந்த ஜாட் ஜாதியைச் சேர்ந்த landlords கொன்று போட்டிருந்தார்கள். நாற்பது வருடங்கள் முன்பு ஒரு தலித குடும்பம் 1500 ரூபாய்க்கு அடமானம் வைத்திருந்தது. கடனை அடைத்த பிறகும் அவர்களை அந்த நிலத்தில் விவசாயம் செய்ய விடவில்லை. அவர்கள் கேஸ் போட்டு பல காலங்கள் கோர்ட்டில் வாதாடி அந்த நிலங்கள் மறுபடியும் அவர்களுக்கு சேருமாறு கோர்ட் தீர்ப்பு அளித்தது. அவர்கள் தீர்ப்பு பிரகாரம் நிலம் எங்களுக்கு சேர வேண்டும் என்று பஞ்சாயத்தை அணுகினார்கள். பஞ்சாயத்தும் நிலத்தை திருப்பி கொடுக்க முடியாது என்று தீர்மானம் செய்தது. கடைசியில் ஒரு தலித் குடும்பம்  அந்த நிலத்தில் இறங்கி உழுதது. ஆனால் அவர்கள் அந்த நிலத்தை அனுபவித்தது 32 நாட்கள்தாம்.

அவர்களுக்கு பாடம் கற்பிக்க வேண்டும் என்று மே 14, 2015 ஜாட் ஜாதிக் கும்பல் ஒன்று டிராக்டர்களுடன் வந்து கற்களாலும், கத்தி கபடாவினாலும் தாக்கினர். அந்த குடும்பங்களை சந்தித்தோம். அவர்கள் அந்த நாள் நடந்த கொடுமையை விவரித்தார்கள். எப்படி பிள்ளைகள், பெற்றோர்கள், கணவர்களை இழந்தோம் என்று விவரித்தார்கள். பெண்களை ஆடை களைந்து கண்ட இடங்களில் தொட்டு பழித்தனர். சில பெண்கள் மாடிக்கு ஓடியபோது வீட்டினுள்ளேயே டிராக்டரை ஒட்டினார்கள்; வீடு கூரையுடன் சரிந்து விழுந்தது. மூன்று பேர் உடனே உயிரிழந்தார்கள். இரண்டு பேர் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். இறந்தவர்களின் சடலங்களை சின்னபின்ன படுத்தி கண்களை பிடுங்கி கால்களை வெட்டிபோட்டு போனார்கள். பெரும் காயங்களுடன் பலர் ஆஸ்பத்திரிக்கு எடுத்து செல்லப் பட்டார்கள். ஆனால் ஜாட் ஜாதியினர் ஆஸ்பத்திரிக்கும் வந்து பிழைத்திருந்தவர்களை கொள்ள முயன்றார்கள்.

போலிஸ் வழக்கம் போல் மொபைல் போன்களை சுவிச் ஆப் செய்துவிட்டு, இரண்டு மணி நேரம் தாமதமாக வந்தார்கள். ஒருவர் மட்டும் மேல்  கொலை குற்றத்தை பதி செய்துவிட்டு, இது தலித் பற்றிய குற்றம் அல்ல, நிலத் தகராறு என்று பதிவு செய்து கொண்டார்கள். ஆனால் உள்ளூர் தலித்துகள் இதை ஒப்புக்கொள்ளவில்லை. பல நிறுவனங்கள் இவர்களுக்கு ஆதரவு செய்து, வெகு நாள் போராடி கேசை சிபிஐக்கு மாற்றினர். சிபிஐ தலித்துகள் மேல் இருந்த குற்றச்சாட்டுகளை விடுவித்தது. ஆனால் போலீசார் இந்த கழகத்திற்கு துணையாக இருந்ததை ஒப்புக்கொள்ளவில்லை. மேல் ஜாதியினர் தலித்துகளை இன்னும் வேலை கொடுக்காமல் புறக்கணிக்கிறார்கள்.  தலித் ஜாதியில் சில பேர், மற்றும் முஸ்லிம்கள் கூட அவர்களுக்கு ஆதரவாக இருப்பதற்கு

தயங்குகிறார்கள். எங்கள் யாத்திரையை தங்கள் கிராமத்திற்குள்ளேயே கூப்பிட்டு பொதுக் கூட்டம் அமைத்து பெண்கள் உட்பட பேசியதற்கு அவர்களுடைய தைரியத்தை மெச்சிக் கொள்ளவேண்டும்.

மாலையில் கேக்ரி கிராமத்தில் வேறு விதமான வன்முறையை பார்த்தோம். ஸூனியக்காரி, மந்திரவாதி என்று குற்றச்சாட்டு செய்து ஒரு பெண்மணியை கோரமாக கொன்றுபோட்டார்கள். அவளுடைய குடிகாரக் கணவன் இறந்து போயிருந்தான். கர்மகாரியங்கள் தீரும் முன்னேயே அவனுடைய சகோதரனும் இறந்தான். அவர்களுடைய சாம்பலை கரைக்கும்போது கணவனின் அண்ணாவின் மகளுக்கு "சாமி" வந்து விட்டது. பேருஜி என்ற சாமி அவள் மேல் வந்து அந்த விதவை ஒரு சூனியக்காரி என்றும் அவள் மனிதப்பீயை திங்க வேண்டும் என்றும் சொல்லி, எரியும் விறகுக் கட்டையை அவள் கால் கைகள் மேல் வைத்து ஆடையை களைந்து வீட்டை விட்டு ஓட வைத்தார்கள். அவள் வழியில் கத்தி அழுதபோது இரண்டு மூன்றுபெண்களும் ஆண்களும் சேர்ந்து அவளை இந்த சித்திரவதைக்கு உள்ளாக்கினார்கள். எரியும் கரியில் அவளுடைய முகத்தை வைத்து அமுக்கினார்கள். அவளுடைய மகன் அவள் நிர்வாணமாக ஓடுவதை பார்க்க சகிக்காமல் பயந்து போய் வீட்டுற்குள் நுழைந்து கதவைப் பூட்டிக்கொண்டு கம்பளி ஒன்றை போர்த்திக் கொண்டு கிடந்தான். அக்கம் பக்கம் யாரும் அவளை காப்பற்ற முன் வர வில்லை அடுத்த நாள் இரவு அவள் இறந்தாள் . உடனே போலிசுக்கு தெரிவிக்க கூடாது என்று அவசரமாக அவள் உடலை தகனம் செய்து விட்டார்கள். கிராம பஞ்சாயத்து கூடி 2500 வரிப்பணம் கட்ட சொல்லிவிட்டு புஷ்கர் ஏரியில் ஸ்நானம் ச்ய்யச்சொல்லிவிட்டு கேசை மூடிவிட்டார்கள். இதோடு அவள் சரித்ரம் முடிந்திருக்கும். ஆனால் ஒரு படித்த உறவினர் அவளுடைய சுற்றோர்களின் எதிர்ப்பை லட்சியம் செய்யாமல் இதை போலிசுக்கு தெரிவித்தார். ஐந்து நாள் போலீசார் எதுவும் செய்யாமல் உட்கார்ந்திருந்தார்கள். அதற்குள் சில மகளிர் இயக்கங்கள் முன் வந்து எதிர்த்தபோது சிலரை கைது செய்தார்கள். ஆனால் கொஞ்சம் கூட வருத்தப்படவில்ல. அவளுடைய மகனுடன் பேசினோம். அவன் இன்னும் அதிர்ச்சியில் இருக்கிறான். ஒரு உணர்வும் இல்லாது கொலை சம்பவத்தை விவரித்தான்.

இந்த சம்பவம் மதச்சிறுபான்மையோர், தலித்துகள் தவிர பெண்களும் வன்முறைக்கு ஆளாகிறார்கள் என்பதை ஞாபகமூட்டியது. அதுவும் தனி மகளிர், கீழ் ஜாதி மகளிர் குருட்டு நம்பிக்கையாலும் பால்வெறுப்பினாலும் பழைய கால வன்முறை செயலுக்கு பலியாகிறார்கள் என்பதை பார்த்தபோது, அதுவும் இவ்வளவு குரூரமான வகையில் சித்திரவதையை கண்ட பொது எங்களுக்கு திகைப்பூட்டியது.

**<u>13 நாள்</u>**

இரவு பத்து மணிக்கு ராஜஸ்தானில் உள்ள பில்வாடா நகரத்துக்கு வந்து சேர்ந்தோம். தாமதமானாலும் காத்திருந்து எங்களை வரவேற்று மத வேறுபாடுகள், சச்சரவுகள்

அதிமாகிற நிலைமையை விவரித்தார்கள். மறுநாள் காலை பில்வாடா சாலைகளில் அமைதி ஊர்வலம் சென்று அம்பேத்கர் சிலையின் அருகே அஞ்சலி செய்தோம். நமது அரசு அமைப்பில் சகோதரத்துவம் அடிப்படையான கொள்கை என்பதை வற்புறுத்தினோம். பிறகு உதயபூருக்கு கிளம்பினோம். அங்கே பெரிய அளவில் வரவேற்பு காத்திருந்தது. மதிய உணவு பிறகு குஜராத்திற்கு கிளம்பினோம்.

எல்லைக்கு அருகே ஒரு ஏழை ஆதிவாசிகள் வசிக்கும் குக்கிராமத்திற்கு – கொட்டகடி – என்று பெயர்- சபர்கந்த ஜில்லாவில் இருக்கிறது- அங்கு போனோம். நான்கு மாதத்திற்கு முன்பு இந்த கிராமம் நம்பமுடியாத கொடுமையை அனுபவித்திருக்கிறது- மறுபடியும் அந்த வெகுளியான ஒன்னும் தெரியாத பசு பேரில் நடந்த கொடுமை.

2 மே 2017, போலீசார் அந்த கிராமத்தில் ஒரு பசுவதை நடந்திருக்கிறது என்று பதிவு செய்தனர். உடனே போலீசார் அங்கே வந்தபோது ஐந்து பேர் ஒரு இறந்த காளை மாடருகே இருப்பதைக் கண்டனர் அவர்கள் பதிவு செய்த குற்றச்சாட்டில் காலை மாடி பசுமாட்டின் பிள்ளை-வம்சம் என்று குறித்திருந்தனர்! விவரமாக எப்படி காளையை கொன்று போட்டிருந்தார்கள் – அதன் கொம்புகளை வெட்டியிருந்தார்கள், தோலை பிரித்திருந்தார்கள், என்றெல்லாம் விவரிக்கப் பட்டிருந்தது. சடலத்திற்கு அருகே ஒரு தரசு, அரிவாள், கத்தி போன்றவை இருந்ததாகவும், போலிசார் அவர்களை துரத்தியபோது நான்கு பேர் ஓடிபோய் விட்டனர் என்று எழுதியிருந்தது. தலித் ஒருவரை – அவர் பெயர் லேபாபாய் பம்பிபாய்- கைது செய்தனர். அவன் தான் சின்ன பையனாக இருந்த போதிலிருந்து செய்யும் வேலையை- அதாவது தன் ஜாதி-குல வேலை வழக்கபடி செத்த மாட்டின் தோலை பிரித்துக் கொண்டிருந்தான் என்றும், அவன் அதைக் கொல்லவில்லை என்றும் எத்தனையோ முறையீடு செய்தாலும் அவனை போலீசார் விடவில்லை. நீ பொய் சொல்கிறாய் என்று அவனை அடித்துபோட்டனர். கோர்ட்டில் அவன் போலீசார் அவனிடம் இரண்டு லக்ஷம் ரூபாய் கொடுத்தால் விட்டுவிடுவோம் என்று சொன்னார்கள் என்று கூறினான். அவனுடைய குடும்பம் ஒரு லக்ஸ் ருபாயை திரட்டிகொடுத்தது. ஆனால் அது போறவில்லை என்றார்கள். பிறகு போலிஸ் 55 வயதான ஆதிவாசி விவசாயி கொதர்பஹி கமர் என்பவரையும் இரண்டு முஸ்லிம்களையும் – இமாம்பாயி, ஷப்பிர்பாயி- அழைத்து சென்று அடித்து நொறுக்கினார்கள். கோடர்பஹி செத்தே போனார்.

அவருடைய விதவை சொன்னது: கோடர்பஹி வயலில் தூங்கி கொண்டிருந்தார். விடிகாலையில் போலீசார் வந்து அவரை கண்டபடி அடித்துப் போட்டனர். அவள் உரக்க கத்தியபோது உன் கணவர் முகத்தை கடைசியாக பார்த்துக்கொள், சாவு காரியத்திற்கு ரெடியாகு என்று சொல்லிவிட்டு அழைத்து போனார்கள். தரதரவென்று அவரை இழுத்து கொண்டு கிராமத்து நடுவே கிடத்தி அடித்தார்கள். அடி பொறுக்காமல் அவர் துணிமணிகள் எல்லாம் மூத்திரத்தினாலும் வெளிக்கியினாலும் நனைந்து போயிருந்ததாக அவருடைய பிள்ளைகள் சொன்னார்கள். பிறகு அவரை இருபது

மெயில் தூரத்தில் உள்ள கிராமத்திற்கு அழைத்து சென்று அங்கே கிராம நடுவில் மறுபடியும் அடித்தார்கள். பசுவதை செய்தால் இப்படிதான் ஆகும் என்கிற வகையில் கிராமப் பொதுவில் அவரை அடித்து நொறுக்கினார்கள். இதெல்லாம் பசுவெறிகும்பல் செய்யும்போல்தான். அதை இங்கே யூனிபாரத்தில் உள்ள போலீசார் செய்து கொண்டிருந்தனர். பிறகு போலிஸ் ஸ்டேஷனுக்கு அழைத்து சென்றார்கள். அங்கிருந்து அவர் பிள்ளைகளுக்கு பொன் செய்தார்: “என்னை அடித்துகொன்றுவிட்டார்கள். தலையில் பெல்டால் அடித்தார்கள். எனக்கு உடம்பு கொஞ்சம் கூட சரியில்லை; நடக்ககூட முடியவில்லை. நான்கு லக்ஷம் கொடுத்தால் விட்டுவிடுவேன் என்கிறார்கள். உடனே நம் நிலத்தை அடமானம் வைத்து பணத்தை கொண்டு வாங்க, இல்லாவிட்டால் நான் உயிரோடு இருக்கமுடியாது.” அவருடைய பிள்ளைகள் உடனே நிலத்தை அடமானம் செய்ய முயன்றார்கள். அதற்குள்ளேயே அவரை அஹமதாபாதுக்கு ஆஸ்பத்திரியில் சேர்க்க பட்டதாக போன் வந்தது. கிராமத்தினர் ஒரு டாக்சி வைத்துகொண்டு போனார்கள். அவர் சிறிது நேரத்தில் இறந்து போனார்.

சாந்தாபென் “என் கணவர் பசு மாட்டை கொன்றதோ தோலை பிரிக்கும் வேலையோ செய்ததே இல்லை. எங்களுக்கு இரண்டு நாட்டு பசு மாடு இருக்கின்றன, அவை டீக்கு சரிப்படியாக பால் கொடுப்பவை. அவர் எங்கள் நிலத்தில் வேலை செய்வது போக வேறே யாராவது கூப்பிட்டால் கூலி வேலை செய்வார். போலீசார் எதற்கு அவரை பசுவதை செய்ததாக அடித்து கொன்றார்கள் என்று புரியவில்லை” என்று அழுதாள். பதினொன்று குழந்தைகளை விட்டு சென்றார் அவள் கணவர். கடைசி குழந்தைக்கு ஐந்து வயது. பெரியவனுக்கு முப்பது மேல் வயது. “எப்படி இந்த குழந்தைகளை வளர்ப்பேன். எங்கள் வாழ்க்கை பசுவை விட கேவலமாக போய்விட்டது, நாய்பாடு ஆகிவிட்டது.”

இந்த சம்பவம் சட்டத்தை தலைகீழே மாற்றிவிட்டிருந்தது. ஒரு ஆதிவாசி, ஒரு தலித், இரண்டு முஸ்லிம்கள் பசு வதை செய்வதாக அடித்து நொறுக்கி சித்ரவதை செய்யப்பட்டனர்.; கடைசியில் அது பசுமாடு கூட அல்ல; காலை மாடி கொள்ளக் கூடாது என்று எந்த சட்டமும் இல்லை; அதற்கு மேல் பணம் வேறு பிடுங்கினார்கள்; ஒருவர் செத்தே போய்விட்டிருந்தார்.

உண்மையாகவே நம் நாட்டில் ஆதிவாசிகள், முஸ்லிம்கள் தலித்துகளின் உயிரும் வாழ்க்கையும் பசுமாட்டை விட கேவலமாக இருக்கிறது.

**<u>14 ஆம் நாள்.</u>**

யாத்திரை கடைசி கட்டத்திற்கு வந்து கொண்டிருக்கிறது. சகபிரயாணிகள் கழித்துப் போயிருக்கிறார்கள். உடம்பில் மட்டுமல்ல, ஆன்மாவில் கூட சோர்வு வந்திருக்கிறது; இவ்வளவு வெறுப்பும், வன்முறையும் நிறைந்த நிகழ்ச்சிகளை கேட்டு கேட்டு மனது

பச்சை புண்ணாகியிருக்கிறது. ஆனாலும் ஒன்று மட்டும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்; நமக்கு கேட்பதற்கே இவ்வளவு கஷ்டமாக இருந்தால் அதை அனுபவித்துக் கொண்டிருப்பவர்களுக்கு, அந்த ஞாபகங்களோடு வாழ்ந்து கொண்டிருப்பவருக்கு, மேலும் அரசாங்க உதவியுடன் இந்த வெறுப்பு, வன்முறை நீடிக்கும்போது அவர்களுக்கு எவ்வளவு கஷ்டமாயிருக்கும்?

இன்று நாங்கள் முஹம்மது அயூப் வீட்டிற்குச் சென்றோம். பசுக்காப்போர் படையால் கொல்லப் பட்டவர். நீருதான் அவர் இறந்துபோய் ஒரு வருடம் நிரந்த காரியங்களை செய்து முடித்திருந்தார்கள். அயூபின் அப்பா ஒரு குடிகாரர். வீட்டுக்கு வெளியே வசித்துக் கொண்டிருந்தார். வீட்டுச் செலவுக்கு ஒன்றும் கொடுத்ததில்லை. அயூபின் அம்மாதான் வீட்டுவேலை செய்து அயூபையும் அவனுடைய தம்பியையும் வளர்த்தாள். அயூபுக்கு கல்யாணம் ஆகி இரண்டு குழந்தைகளும் இருந்தார்கள். ஆட்டோ ரிக்ஷா ஓட்டி பிழைத்துக் கொண்டிருந்தான்.

போன வருடம் பக்ரீது பண்டிகை முன்பு அயூப் கொஞ்சம் அதிக பணம் சம்பாதிப்பதற்காக வேண்டி அடுத்த மாகாணமான ராஜஸ்தானுக்கு சென்று சில மாடுகளை ஒட்டிக்கொண்டு வந்தான். நடுவில் பசுக்காப்போர் கூட்டம் அவனது வண்டியை துரத்தி நிறுத்தி அவனை அடித்து நொறுக்கிப் போட்டார்கள். அவன் மயக்கமாய் விழுந்தபோது சாலையின் நடுவே கிடத்திவிட்டு விபத்து என்று சொல்லி தப்பித்துக் கொள்ளலாம் என்று ஓடிவிட்டனர். அதிர்ஷ்ட வசம் ஒரு போலிஸ் பாட்ரோல் வண்டி அவனை அழைத்துசென்று ஆஸ்பத்திரியி சேர்த்தது. மூன்று நாள் கழித்து அவன் இறந்து போனான்.

எப்போதும் போல போலீசார் அயூபின் மேல் பசு வதை சட்டம் கீழ் குற்றக் கேஸ் பதிவு செய்தார்கள். வேகமாக வண்டி ஓட்டினான் என்று இன்னொரு குற்றச்சாட்டு. பேர் முகம் தெரியாத கும்பல் அவனை தாக்கியதாக பதிவு செய்தார்கள். சிசிடீவீ கமராவில் தாக்கியவர்களின் முகம், அடையாளம் பசுக்காப்போர் கூட்டம் என்று நன்றாக தெரிந்தாலும், அந்த காமரா படங்களை அயூபின் குடும்பத்தினர் பார்த்திருந்த போதிலும் அவர்கள் முன்பின் தெரியாதவர்கள் என்று பதிவு செய்தனர்.

அயூப் இறந்த பிறகு உள்ளூர் முஸ்லிம் சமுதாயத்தை சேர்ந்த பெரியவர்கள் ஆயிரம் பேர்களைத் திரட்டிக்கொண்டு ஆஸ்பத்திரியை சூழ்ந்து அயூபின் சடலத்தை எடுத்துப் போகமாட்டோம், முதலில் அவர் கம்படியால் பசுக்கப்போர் படையால் கொல்லப் பட்டார், தாக்குதல் செய்தவர்களின் முகம், அடையாளம் எல்லாம் சிசிடீவீ கமராவில் தெளிவாகத் தெரிகின்றன என்றும் பதிவு செய்யுங்கள் என்று எதிர்ப்பு நடத்தினர். போலீசார் இவற்றை சுலபமாக ஒப்புக் கொள்ளவில்லை; நேரம் கடத்தினார்கள். ஆனால் கூட்டம் அதிமாகிக் கொண்டேயிருந்ததை பார்த்து பயந்து போனார்கள். பல பேரன்களுக்கு பிறகு சடலத்தை ரகசியமாக அயூபின் வீட்டுக்கு கொண்டு சேர்த்தனர்.

ஆனால் அயூபின் குடும்பம் தங்களுடைய கோரிக்கைகளை விட்டுவிடவில்லை; மேலும் குற்றவாளிகளை இரண்டு நாட்குள் கைது செய்யவேண்டும் என்று வற்புறுத்தினர்.

கடைசியில் போலீசார் ஒப்புக்கொண்டு சிசிடீவியில் தெரிந்த பேர்களை IPC செக்சன் 302 கீழ் கைது செய்தார்கள். அயூபை மிகுந்த துக்கத்துடன் பூமியில் இறக்கினார்கள். கைது செய்யப் பட்டவர்கள் பெயிலில் வெளிவந்து ஹைகோர்ட்டுக்கு அப்பீலுக்கு போயிருக்கிறார்கள்.

நாங்கள் சந்தித்த எல்லா குடும்பங்களில் இந்த குடும்பம் ஒன்றே அரசாங்கம் வெட்கமில்லாத முறையில் குற்றத்தை மறைக்க முயன்றாலும் குற்றவாளிகளை கைது செய்யவித்து நியாய போராட்டத்தில் கொஞ்சமானாலும் வெற்றி பெற்றது. 2002இல் குஜராத்தில் நடந்த மதகலகங்களுக்கு பிறகு அதில் பிழைத்தவர்கள் மதவெறி பிடித்த அரசாங்கத்துக்கு எதிராக செய்திருந்த மிகப் பெரிய மனித உரிமைப் போராட்டம் நடத்தினார்கள். அதன் விளைவாக இந்த நிகழ்ச்சி நடந்தபோது பாதிக்கப் பட்டவர்கள் அதை சிறிதும் ஒப்புக் கொள்ளாமல் நடத்திய போராட்டம் இது. இந்த நிகழ்ச்சிக்கு பிறகு கம்படி கொலைகள் குஜராத்தில் நடக்கவில்லை. அயூபின் குடும்பத்திற்கு இது சிறிது ஆறுதல் கொடுத்தாலும் இன்றும் அவருடைய மரணத்தை ஒப்புக்கொள்ள முடியாமல் தவிக்கிறார்கள்.

**<u>15 ஆம் நாள்</u>**

குஜராத்தில் மூன்றாம் நாள் வடவலி என்ற கிராமத்திற்குச் சென்று கொல்லப்பட்ட இப்ராஹீம் என்றவருடைய விதவையை சந்தித்தோம். நசீம்பேன். இந்த வருடம் சில மாதங்கள் முன்பு நடந்த இந்த சம்பவத்தில் இப்ராஹீம் இறந்து போனது மட்டுமல்லாமல் 140 வீடுகளை கொளுத்தியிருந்தார்கள், பலபேர் காயம் பட்டிருந்தார்கள். .

அரசாங்க அதிகாரம் பிரகாரம் அங்கு இரண்டு மதத்தை சேர்ந்த மாணவர்களிடையே கலகம் உண்டாயிற்று. பத்தாம் கிளாஸ் பரீட்சையில் ஒரு ராஜ்புத் மாணவன் முஸ்லிம் மாணவனருகே உட்கார்ந்து பரீக்ஷை எழுதிக் கொண்டிருந்தார்கள். ராஜ்புத் பையன் காப்பி அடித்துக் கொண்டிருந்தான் என்று வெளியேற்றப் பட்டான். அந்த பையன் இந்த முஸ்லிம் பையனே அவன் காப்பி அடித்ததை காட்டிகொடுத்தான் என்று நினைத்தான். பரீட்சை ஆனதும் முஸ்லிம் பையனை அடித்து தாக்கினான். வயதான ஒரு முஸ்லிம் அவர்களை தடுத்தபோது அவருக்கும் நாலு அடி விழுந்தது. ராஜ்புத் பையன் அவனுடைய கிராமத்துக்கு சென்று15 பெரியவர்களைக் கூட்டிகொண்டுவந்தான். அந்த முஸ்லிம் பையனை அவர்கள் கடுமையாக கோபித்துக் கொண்டனர். பெரியவர்கள் எல்லோரும் சேர்ந்து சிறிய பையன்களின் சச்சரவுகளை பெரிது பண்ண கூடாது என்று சமாதானம் சொல்லி அனுப்பி வைத்தனர்.

இரண்டு மணி நேரம் பிறகு சுமார் 2000 ராஜ்புத் ஜாதியினர் கும்பலாக டிராக்டர்கள், கார்கள், பெட்ரோல், சிமெண்டு வீடுகளையும் எரிக்கக் கூடிய திராவகம், கம்பு, கத்தி கபடாவுடன் வந்து பெரிய கலகம் செய்தனர். புருஷர்களை அடுத்துக் கொண்டு வீடுகளுக்கு தீ வைத்தனர். பெண்கலும் குழந்தைகளும் பயத்தில் அங்கும் இங்கும் சிதறி ஓடினார்கள். வீட்டிலேயும் வயலிலும் மறைந்து கொண்டார்கள்

நசீம்பேன் சொன்னது இது: திடீரென்று ஒரு கும்பல் வந்து அவர்களைத் தாக்கியது. அவள் கணவர் இப்ராஹீம் மனைவியையும் குழந்தைகளையும் பின் கதவின் வழியாக வெளியே அனுப்பிவிட்டு பிள்ளைகளை மாடிக்கு அனுப்பிவிட்டு வீயட்டுகுள்ளே மறைந்து கொண்டார். கும்பல் அவர் வீட்டு கதவை உடைத்து அவரை வெளியே இழுத்து அடித்து கொன்றனர். இதையெல்லாம் பார்த்துக் கொண்டு போலிஸ் சும்மா இருந்தனர்.

அதிகாரம் பிரகாரம் கலக்கம் தானாகவே முன்திட்டம் இல்லாமலே எழுந்தது என்றால் இரண்டு மணி நேரத்தில் எப்படி இவ்வளவு பேர்களை திரட்டிக்கொண்டு வந்தார்கள், எப்படி இவ்வளவு பெட்ரோல் கம்பு, கத்திகபடாவைக் கொண்டுவந்தார்கள் என்பதற்கு விளக்கம் எதுவும் இல்லை. இதையெல்லாம் கவனத்தில் வைத்து கொண்டு பார்த்தால் இது திட்டமிட்டு செய்த காரியம் என்று படுகிறது; முன்பே அவர்களுக்கு இடையே இருந்த தகராறில் முஸ்லிம்களுக்கு ஒரு பாடம் கற்பிக்கவேண்டும் என்று செய்ததுபோலிருக்கிறது.

பஞ்சாயத்து தேர்தலில் முஸ்லிம்களுக்கும் படேல்களுக்கும் நிறைய வாக்காளிகள் இருந்தாலும் சர்பன்ச் பதவிக்கு போதுமான மஜாரிட்டி இல்லை. முஸ்லிம்களும் ராஜபுத்துகளும் ஒரு ஒப்பந்தத்திற்கு வந்தார்கள்: பாதி நேரம் முஸ்லிம் சர்பஞ்சாக இருப்பதாகவும், அடுத்தபாதி காலம் படேல் சர்பஞ்சாக இருப்பது என்ற முடிவுக்கு வந்தார்கள். ஆனால் தேர்தலில் ஒரு எதிர்ப்பும் இல்லாமல் முஸ்லிம் பெண்மணி சர்பன்ச்சாக ஜெயித்தார். இதைக்கண்டு ராஜ்புத் ஜாதியனருக்கு கோபம் வந்து முஸ்லிம்களுக்கு மறக்க கூடாத பாடம் கற்பிக்கவேண்டும் என்று நினைத்து அந்த முஸ்லிம் பெண்மணியின் கணவரை சுட்டுவிட்டு (அவர் எப்படியோ பிழைத்துவிட்டார்) அவருக்கு முக்கியமாக ஆதரவு தந்த இப்ராஹீமையும் அடித்து கொன்றுபோட்டனர்.

போலீசார் ராஜ்புத் ஜாதியினர் மேலும் முஸ்லிம்கள் மேலும் செக்ஷன் 120A Indian Penal Code கீழே கேஸ் பதிவு செய்தார்கள். முஸ்லிகளுக்கு அரசாங்கத்திலிருந்து எந்த உதவியும் கிடைக்கவில்லை, அவர்களை யாரும் சந்திக்க வரவில்லை.

சில மணி நேரங்கள் பிறகு ஆனந்த் மாவட்டத்தில் உள்ள கஷோர் என்ற கிராமத்துக்கு போய் அங்கு தலித் ரோஹித் சமூகத்தை சேர்ந்த சைலேஷ் மணி பாயையும் அவருடைய தாய் மனிபென்னையும் சந்தித்தோம். பத்தாவது கிளாஸ்

படித்திருந்தாலும் நீசமான குல வேலைதான் செய்ய வேண்டியிருந்தது. அவனுடைய தந்தை 15 வருடமாக நோய்வாய் பட்டிருக்கிறார். சில சக ரோஹித் சகோதரர்கள் டிராக்டர் ஒன்றை வாங்கி வைத்திருந்தார்கள். கிராமத்தில் ஏதாவது மாடு செத்து போனால் கிராமத்தினர் சைலேஷுக்கு சொல்லி அனுப்புவார்கள். அவன் அவனுடைய நண்பனை தொடர்பு செய்து டிராக்டரில் மாடை ஏற்றிகொண்டு போய் கிராமத்திலே செத்து போன மிருகங்களின் சடலத்தை எறிவதற்காக நியமித்த பள்ளத்தில் எறிந்து விடுவது வழக்கம்.

11 ஆகஸ்டு 2017 தேதி ஒரு ராஜ்புத் அவருடைய பசு மாடு செத்ததாக சேதி சொல்லி அனுப்பியிருந்தார். சைலேஷ் வழக்கம் போல டிராக்டரை எடுத்துக் கொண்டு மாட்டை ஏற்றி கொண்டு போனான். மழையில் பள்ளம் சேரும் சகதியுமாக இருந்ததால் வேறு ஒரு இடம், கொஞ்சம் காய்ந்திருந்த இடத்தில், அங்கே பக்கத்தில் ஊர் சுடுகாடு இருந்தது, அங்கே மாட்டை இறக்கினார்கள். ஊர்வாசிகள் சுடுகாடை செத்த மாட்டினால் தீட்டு பண்ணிவிட்டான் என்று புகார் செய்தனர். சைலேஷ் அடுத்த தடவை அது மாதிரி செய்ய மாட்டேன் என்று சொல்லிவிட்டான். அதோடு விஷயம் மூடப்பட்டிருந்தால் சரியாக இருந்திருக்கும். அடுத்த நாள் 150 ராஜபுத்ரர்கள் ரோஹித்ஜாதி சேரிக்கு வந்து சலேஷை அதிகப்ரசங்கி என்று கண்ட படி அவன் ஜாதியை திட்டிவிட்டு அடித்து போட்டனர். தடுக்கவந்த அவனுடைய அம்மாவையும் அடித்து போட்டனர். அவள் ஆஸ்பத்திரியில் சில நாள் இருக்கவேண்டிவன்தது.

முன் பரம்பரை மக்கள் இந்த அடிதடியை ஒப்புக்கொண்டிருப்பார்கள். அனால் சைலேஷ் ஒப்புக் கொள்ளவில்லை. எஸ்ஸி எஸ்டி சட்டம் கீழ் புகார் செய்து பதிவு செய்வித்தான். மேலும் இனிமேல் மாட்டு சடலத்தை நாங்கள் எடுக்க மாட்டோம் என்றும் தெரிவித்தான்.

மேல்ஜாதியினர் கோபமாக உள்ளார்கள். ஆனால் குற்றம் நிரூபிக்க பட்டால் நீண்ட நாள் ஜெயிலில் இருக்க வேண்டி வரும். அதனால் அவர்களே மாட்டு சடலங்களை ஒரு சின்ன குழி தோண்டி புதைத்து கொண்டிருக்கிறார்கள். ரோஹித் ஜாதியினரை மேல்ஜாதியினர் தள்ளி வைத்து விட்டார்கள். அவர்களுக்கு வேலை கொடுப்பதில்லை. ரோஹித்துகள் மேல்சாதியினரின் பேச்சுவார்த்தைகளுக்கு பழி வாங்குவதற்கு பயந்து தம் குழந்தைகளை தூரத்தில் வேறு ஒரு பள்ளிக்கூடத்திற்கு மாற்றி விட்டார்கள். 11 வருடம் ஒரு தொழிற்சாலையில் வேலை செய்தவரை திடீரென்று வேலையை விட்டு நிறுத்திவிட்டார்கள். அவரும் லேபர் கோர்ட்டில் வேலை நிறுத்தத்திற்கு எதிராக புகார் செய்துள்ளார்.

தாளித்துக இந்த கிராமத்தில் உஷாராக இருக்கிறார்கள். தங்கள் சுய மரியாதையை காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்று உற்சாகமாக இருக்கிறார்கள். நாங்கள் அங்கு சென்ற போது ஜெயபீம் என்று அடிக்கொருமுறை முழங்கினார்கள். அவர்கள் செய்யும்

போராட்டம் அவர்களுக்கு மட்டுமல்ல நாம் எல்லோருக்கும் தான் என்று நான் அவர்களுக்கு கூறினேன்.

**16 நாள்.**

எங்கள் கடைசி நிறுத்தம் ஒரு ஆதிவாசி கிராமம். பஞ்ச்மஹால் மாவட்டத்தில் உள்ள கரோலா கிராமத்தில் தஹிபேன் என்ற பேருடைய தலித் பெண்மணியை சந்தித்தோம். அவளை கணவர் இறந்த பிறகு சூனியக்காரி என்று பன்னிரண்டு வருடங்களாக துன்புறுத்தினார்கள். ஆனால் அவள் அந்த அபநிந்தையை எதிர்த்து வெற்றி பெற்றாள்.

இந்த யாத்திரயுயை தொடங்கியபோது நாங்கள் மத, குல வெறுப்பு வன்முறையாழ் பாதிக்கப்பட்ட குடும்பங்களை சந்திக்க மட்டுமே நினைத்தோம். எங்கள் பெமினிஸ்ட் நண்பர்கள் ராஜஸ்தானிலும் குஜராத்திலு பல பெண்கள்- அதுவும் ட்ஹலிஹ், ஆதிவாசி குடும்பங்களை சேர்ந்த தனியாக வாழும் பெண்கள் மந்திரவாதி, சூனியக்காரி என்று துன்புறுத்த படுகிறார்கள், அவர்களையும் சந்திக்கவேண்டும் என்று கூறினார்கள்.

தஹிபேன் கணவர் திடீரென்று இறந்த பொது அவள் வயது 30. இரண்டு சின்ன குழந்தைகள். முன்பு எந்த வியாதியும் இருந்ததாக தெரியவில்லை. அவள் வர்ணனையை கேட்டால் அது ஹார்ட் அட்டாக் என்று பட்டது. அவளுடைய மைத்துனர் அவள் சூனியக்காரி என்றும் அவள் ஏதோ மந்திரம் செய்து கொலை செய்துவிட்டாள் என்று குற்றம் சாட்டினார். அப்போதிலிருந்து வீட்டில் என்ன பிரச்னை வந்தாலும், யாருக்கு எந்த வியாதி வந்தாலும், யார் செத்து போனாலும், தூரத்தில் பெங்களூரில் மருமகனுக்கு ஜுரம் வந்தாலும் கூட அவளையே குற்றம் சொல்லி கொண்டிருந்தார்கள்.

அவளுடைய கணவர் அரசாங்க மிருக ஆஸ்பத்திரியில் வேலை செய்து வந்தார். அவர் இறந்த பிறகு தஹிபென்னுக்கு அந்த வேலை கிடைத்தது. 350 ரூபாய்தான் சம்பளம். ஆனால் அது அவள் குடும்பம் நடத்தி குழந்தைகளை வளர்ப்பதற்கு எவ்வளவோ உதவியது.

ஆனால் அவள் மைத்துனன் அவளை துன்புறுத்துவதை நிறுத்தவில்லை. வேலைக்குபோனால் அங்கே வந்து கண்டபடி வசை பாடினான். தனியாக இருந்தால் கற்பழிக்க முயன்றான். அவனுடைய மனைவி பாரிச வாயு வந்து நோய்பட்டாள். அதுவும் அவளால்தான் என்று கூறினான். அவளைப் பிடித்திருக்கும் ஆவியை விரட்ட பூஜைகள் செய்தான். அவளை வீட்டை விட்டு துரத்த முயன்றான். அவள் அவனை திரும்பக் கேட்டாள்: அவள் மந்திரவாதி என்பது நிஜமானால் அவன் எப்படி பிழைத்திருக்க முடியும்? என் கணவர் கட்டிக் கொடுத்த வீட்டையும் நிலத்தையும் விட்டு போக மாட்டேன் என்று திண்ணமாக சொல்லி விட்டாள்.

ஒருநாள் அவன் அவளை பின்பற்றி ஆஸ்பத்திரிக்குச் சென்று ஹாக்கி பாட்டினால் அவள் தலையில் அடித்தான். தலை ரத்தவிளாராக மாறி முதுகில் காயம் பட்டு அவள் 20 நாட்கள் ஆஸ்பத்திரியில் இருந்தாள். தலையில் 24 தையல்கள் போட்டார்கள். ரொம்ப கஷ்ட்டமாக அவள் பிழைத்தாள். அவளுடைய மகன் படிப்பை நிறுத்திவிட்டு அவளை தனியாக எங்கும் அனுப்பாமல் எப்பவும் தன் கண்ணெதிரே வைத்து கொள்ளவேண்டும் என்று முடிவுக்கு வந்தான். அவளுக்கும் தனக்கும் ஒரு பால் கூட்டுறவில் வேலை தேடிக் கொண்டு அவளை எங்கேயும் தனியாக அனுப்பாமல் பார்த்து கொள்ளுகிறான். எங்கே போனாலும் இருவரும் கூடியே போகிறார்கள், வருகிறார்கள்.

ஆனந்தி என்ற ஒரு ஆதிவாசி மகளிர் நிறுவனம் இந்த மாதிரி மந்திரவாதி என்று துன்புறுத்தப் படும் மகளிருக்கு உதவி செய்கிறது. அவர்களுடைய உதவியுடன் மைத்துனன் மேல் போலிஸ் கேஸ் பதிவு செய்தார்கள். அவன் கிராம பட்வாரி ஆனதால் செல்வாக்கு உள்ளவன். அவன் ஒரு நாள் மட்டுமே ஜெயிலில் இருந்துவிட்டு பெயிலில் வெளியே வந்தான்.

இப்போதும் அவனுக்கு எந்த வருத்தமும் இல்லை. அவளை எப்படியாவது நிலத்தை விட்டு துரத்தி அவளுடைய நிலத்தை சொந்தமாகிக் கொள்ளவேண்டும் என்று நினைக்கிறானோ என்னவோ. எங்கு பார்த்தாலும் அவளை வசை பாடுகிறான். அவளுடைய பிள்ளைகள் உதவியும் ஆனந்தி நிறுவனத்தின் உதவியும் அவளைக் காப்பாற்றுகிறது. ஆனந்தி நிறுவனம் பல மீட்டிங்குகள் செய்ததில் கிராமத்தினர் அவளுக்கு ஆதரவு கொடுக்கிறார்கள்.

இன்று யாத்திரையின் கடைசி நாள். கோத்ரா நகருக்கு இரவு வந்து சேர்ந்தோம். மறுநாள் காலை அங்கே உள்ள காந்தி ஆஸ்ரமத்தில் கூடினோம். கோத்ரா நகருக்கு இரண்டு விசேஷம்: ஒன்று 15 வருடம் முன்னே கோத்ராவில் ரயிலை கொளுத்தி போட்ட சம்பவத்தில் பல இந்துக்கள் மரணம் அடைந்தார்கள்; இரண்டாவது சரியாக 100 வருடங்கள் முன்பு 1917 இல் காந்தி ஆஸ்ரமம் அங்கே அமைக்கப்பட்டது. காந்தி அங்கே அடிக்கடி வந்து மத சமரசத்திற்காகவும், தீண்டாமை ஒழிப்பதற்காகவும் வழிபாட்டு கூட்டங்கள் நாங்கள் கூடிய உயரமான கூரை உள்ள கூடத்திலேயே நடத்தி வந்தார்.

பல நண்பர்கள் இன்று காந்தியை அவர் தீண்டாமையை எதிர்த்தாரே தவிர ஜாதி குல அமைப்பை எதிர்க்கவில்லை என்று கூறி ஏற்றுக்கொள்ளாமல் தவிர்கிறார்கள். அம்பேத்கர் சொன்னது முற்றிலும் சரி: தீண்டாமை சாதி அமைப்பின் ஒரு நீங்கமுடியாத பாகம். சமத்துவத்தை சகோதரத்துவத்தை கொண்டு வரவேண்டுமானால் சாதி அமைப்பை முற்றிலும் மறுக்கவேண்டும்; உடைக்கவேண்டும். ஆனாலும் காந்தி மேல் எனக்கு நிறைய அன்பு தோன்றுகிறது. ஏனெனில் காந்தியின் போர் அன்பு பரஸ்பர மரியாதை, பரஸ்பர நம்பிக்கை போன்ற

அஸ்திவாரத்தில் அமைந்த போர். காந்தியின் கடைசி நாட்கள் நம் நாட்டின் பொன்நான நாட்கள். கொஞ்சம் யோசித்து பாருங்கள். பத்து லட்சம் பேர் நாட்டின் பாகபிரிவினையில் இந்து-முஸ்லிம் கலகங்களில் இறந்துவிட்டிருந்தார்கள். வெறுப்பு தீயில் நாடு வெந்து கொண்டிருந்த நேரம். பாகிஸ்தானுக்கு போகும், அங்கிருந்து வரும் ரயில்கள் சடலங்களுடன் போய் வந்துகொண்டிருந்தன. சரணார்த்திகள் கோபமாக இருந்தனர். இழப்பும் நஷ்டமும் நம்பிக்கை துரோகமும் நிரம்பிய கதைகள் சொல்லிக் கொண்டு வந்தனர். இந்த ரத்தக்களரின் நடுவில் அன்பும் ஒற்றுமையும் குடிமக்களின் சமத்துவ உரிமைகள் மட்டுமே இந்த புதிதாக பிறந்த தேசத்திற்கு அடிப்படையானது என்று கொஞ்சம் கூட மனவுருதி கைவிடாமல் பேசும் தைரியம் காந்திக்கு மட்டுமே இருந்தது. வெறுப்பால் தகித்துகொண்டிருந்த இடங்களுக்கெல்லாம் தில்லியிலும் நவகளியிலும் தனியாக போய் சுற்றினார். இந்த புரட்சிகரமான அன்பு அரசியலுக்கு தான் நாங்கள் சின்ன அஞ்சலி செய்து கொண்டிருந்தோம். அந்த கூடத்தில் உட்கார்ந்து கொண்டு அந்த துணிச்சலான தைரியத்தையும் அன்பையும் நினைத்தபோது அந்த நகரம் சரியாக நூறு வருடங்களுக்கு பிறகு வெறுப்பு அரசியலுக்கு ஒரு சின்னமாகவே ஏற்பட்டுவிட்டதை பற்றி வியந்து கொண்டிருந்தோம். இந்த யாத்திரையில் நாங்கள் ஜைபீம் என்று உற்சாகமாக கத்தும்போது உடனேயே ஜெயகாந்தி என்றும் முழங்குகிறோம். இந்த இவர்களிடமும் நாங்கள் அன்பு சகோதரத்துவம் கண்டு பெறுகிறோம். ஜைபீம்! ஜெயகாந்தி!

## யாத்திரை தொடரும் ....

இந்த அன்பு யாத்திரை 4 செப்டம்பர் 2017, நாகவ்காவ்னிலிருந்து தொடங்கி 148 வருடங்களுக்கு முன்னாள் காந்தி பிறந்த போர்பந்தரில் 2 அக்டோபர் 2017 முடிந்தது. யாத்திரையில் நாங்கள் கண்ட வெறுப்பு வன்முறையால் விளைந்த சோகத்தையும் துக்கத்தையும் பார்த்தபோது மேலும் ஒடுக்கப் பட்ட மக்களின் மேல் அரசாங்க அதிகாரம் அலட்சியத்தையும் கவனித்தபோது இந்த யாத்திரை மேலும் தொடர வேண்டும் என்று தீர்மானம் செய்தோம். சும்மா கற்பனையில் அல்ல; நிஜமாகவே தொடரவேண்டும்.

இந்த யாத்திரையில் பல முயற்சிகள் செய்ய வேண்டியதாக இருக்கும். பல நிறுவனங்கள் குழுக்கள் வெவ்வேறு பணிகளை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை எவ்வாறு பலப்படுத்தவேண்டும், அவர்களுக்கு எவ்வாறு ஆதரவு கொடுக்கவ்ண்டும் என்றே நாங்கள் ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். அவர்களுக்கு போட்டியாகவோ அவர்கள் செய்வதை எல்லாம் நாங்களும் செய்வதற்காக அல்ல.

## எப்படி தொடர முடியும்?

நாங்கள் யாத்திரை செய்யும் போதே ஒரு தலித் பையன் கார்பா கூட்ட நடனத்தை பார்த்தான் என்று கம்படி செய்யப் பட்டான். மேலும் ஒரு தலித் பையன் மீசை

வளர்த்துக் கொண்டான் என்று அடிபட்டான். ஒரு பெண்மணி மந்திரவாதி என்று கொள்ளப் பட்டாள். முஸ்லிம்கள் தொடர்ந்து கும்பல்களாலும் போலிசாலும் கொல்லப் படுகிறார்கள். நாம்- இந்த நாட்டின் குடிமக்கள்- எல்லோரும் சேர்ந்து இதை தடுக்கும் வரை இந்த யாத்திரை தொடரத்தான் வேண்டும். நம்மில் சிலர் ஏதாவது ஒரு மாகாணத்தில் மாதத்திற்கு ஒரு முறையாவது பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றையாவது சந்திக்க வேண்டும்.

## இந்த இருளை பதிவு செய்ய வேண்டும்.

புத்தகங்கள், சினிமாக்கள் போட்டோ எக்சிபிஷன், பொதுக்கூட்டம் மூலமாக இந்த வெறுப்பு இருளை மக்களுக்கு தெரிவிக்க வேண்டும். சக பிரயாணிகள் இப்போதே அவற்றைப் பதிவு செய்ய மக்களிடையே பரப்புவதற்கு வெறுப்பு அரசியலை எதிர்ப்பதற்கு பேசுவதற்கு முயன்று கொண்டிருக்கிறார்கள். மக்களின் மனசாட்சியை எழுப்புவதற்கு இந்த நடவடிக்கைகள் மிகவும் அவசியம் என்று நினைக்கிறோம்.

## வெறுப்பு வன்முறையை கவனிக்கும் குடிமக்களுக்கு ஆதரவு.

பல குற்றங்கள் உள்ளூர் செய்தித்தாள்களில் கூட பிரசுரிக்கப் படுவதில்லை. தேசிய செய்தித்தாள்களில் இன்னும் கொஞ்சம் தான் வெளிவருகிறது. இவற்றில் சிலதான்- அது பெரிய குற்றமானால்தான்- தேசிய மனசாட்சியைத் தொடுகிறது. வெறுப்பு வன்முறையை போலீசார் சாலை விபத்தாகவோ அல்லது தற்காப்புக்காக சுட்டதாகவோ அல்லது பசுவதை சட்டத்தை மீறியதாகவோ பதிவு செய்கிறார்கள். சில குடும்பங்கள் –அதுவும் முஸ்லிம்கள்- புகார் கூட கொடுப்பதற்கு தயங்குகிறார்கள் – பசுவதையைக் காரணமாக்கிக் காட்டி போலீசார் கம்படிக் கொள்ளை கும்பல்களை விட்டு விட்டு தாங்கள்மேல் குற்றச்சாட்டு பதிவு செய்துவிடுவார்களோ என்று பயப்படுகிறார்கள். ஆட்சியில் இருக்கும் கட்சி, மேலும் ராஷ்ட்ரீய சேவா ஸங்கம் இவை அங்கங்கே நடக்கும் முக்கியமில்லாத ஒரு சில நிகழ்ச்சிகள் என்று தள்ளிவிடுகிறார்கள், ஒரு சில மீடியாவைத்தவிர எல்லா மீடியாவும் அதிகாரம் என்ன சொல்லுகிறதோ அதையே ரிப்போர்ட் செய்கிறார்கள். பரவலாக நடக்கும் இந்த குற்றங்களை மறைக்கும் முறையில் அவர்களுக்கும் பங்கு உண்டு.

Hindustan Times, India Spend, Citizens against Hate, Citizens for Justice, PUDR, NCDHR போன்ற சில நிறுவனங்கள் வெறுப்பு வன்முறையை கவனிக்கிறார்கள் அவர்களுடைய முயற்சிகளை ஆதரித்து அவர்களுக்கு வேண்டிய உதவியை அளிப்போம். பாதிக்கப்பட்டவர்களுக்கு காப்பாற்றும் வலை ஒன்றை ஏற்பாடு செய்ய முயற்சி. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆதரவு கொடுப்பதற்கு பலர் முன்வந்துள்ளார்கள். மனித உரிமை குழுக்கள், மனிதாபிமான குழுக்கள், மதசார்பான குழுக்கள், மதசார்பில்லாத குழுக்கள் எல்லோரும் உதவி செய்ய முன்வந்துள்ளார்கள். அவர்கள்

இல்லாத இடத்தில் இந்த அன்பு யாத்திரை குழு முன் வந்து உதவியளிக்கும். நான்கு விதமான உதவி அவர்களுக்கு தேவைப் படுகிறது. ஒன்று சட்ட ரீதியான உதவி. இரண்டாவது மானசிக- சாமூக உதவி. மூன்று அவர்களுக்கு அரசாங்கத்தினிடமிருந்து சேர வேண்டிய உரிமைகளை சேரவைப்பது. நான்கு தங்களுடைய வாழ்க்கையில் சம்பாதிக்கும் மனிதரை இழந்ததாலோ அல்லது கால்நடைகளை இழந்ததாலோ கஷ்டப் படுபவர்களுக்கு  பொருளாதார உதவி. ஒவ்வொரு குடும்பத்துக்கும் உதவி செய்வதற்கு உள்ளூரிலிருந்து இரண்டு பேர்களை- சமுதாய நீதி, சேவை செய்ய வாலண்டீர்கள் நியமிக்க முடிவு எடுத்திருக்கிறோம். அவர்களுக்கு பயிற்சி அளிக்கும் முயற்சியிலும் இருக்கிறோம்.

## சாந்தி மானிட  குடிமக்கள் குழுக்களை அமைக்க ஆதரவு.

Human Rights Law Network, Citizens against Hate, NCDHR, PUCL, PUDR, மேலும் சில கிறிஸ்துவ முஸ்லிம் அமைப்புகள் நியாயத்திற்காக போராடுகாதற்கு முன்வந்துள்ளன. அவர்களுடன் சேர்ந்து கொண்டு நாங்களும் வேலை செய்ய தீர்மானித்திருக்கிறோம். எல்லா மாவட்டத்திலும் சாந்தி மனிதாபிமான குடிமக்கள் குழுக்கள் அமைக்க முயற்சி நடைபெறுகிறது. அவற்றில் சமூகத்தில் நீதிக்கும் நேர்மைக்கும் பேர் போன குலமத விரோதமில்லாத குல, பாலின சமத்துவம், போன்ற கொள்கைகளில் நம்பிக்கை உடையவர்கலான மரியாதைக்குரிய ஆண்களையும் மகளிரையும் அழைத்து அமைப்பது என்பது எங்கள் எண்ணம். இந்த குழுக்கள் வெறுப்பு வன்முறை நிகச்சி நடந்த உடனே, அல்லது நடக்கும் என்று தெரிந்தவுடனே அவற்றை தடுக்க முயற்சிகள் எடுக்கும். அரசாங்க பொறுப்பாளிகளிடன் தெரிவித்து தகுந்த நடவடிக்கைகளை மேல் கொள்ளுமாறு செய்விக்கும்.  வதந்திகளை பரப்ப இயலாத வகையில் மீடியாவுடன் தொடர்பு கொள்ளும். வன்முறை நடந்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு தகுந்த உதவி அளிக்கும். சாந்தி மத சமரச ஒற்றுமை குல மத சமத்துவம், போன்ற கொள்கைகளை கல்வி அமைப்புகள், இளைஞர் குழுக்கள், பெண்களின் நிறுவனங்கள், உள்ளூர் அரசமைப்புகளுடன் சேர்ந்து முன்னேற்றும்.

## யாத்திரை தொடரும்...

நம் நாட்டில் ஒரு கொடுமையான பூதம் ஒன்று கிளம்பி துன்புறுத்துகிறது. வெறுப்பு, பயம், நீதியற்ற அரசியல் இந்த பூதத்தை போஷிக்கின்றன. இதை எதிர்க்க, கருணையை வளர்க்கவும், அரசாங்க அமைப்பைக்  காப்பாற்றவும்  இந்த அன்பு யாத்திரையும், இந்த கொள்கைகளில் நம்பிக்கை கொண்டவர்கள் தமது யாத்திரைகளையும் கட்டாயம் தொடர வேண்டும்.